Registered No. M. 2630 "SIDDHANTHAM"
Vol. 41 — No. 2

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | பிலவங்க மாசி 1968 பிப்ரவரி | இதழ் 2

உள்ளுறை — பக்கம்

உள்ளுறை		பக்கம்
சமாச 62-ஆம் ஆண்டுவிழாத் தொடக்கவுரை	...	25
அருகன் துதியும் அப்பரும்	...	37
திருஎருக்கத்தம் புலியூர்	...	40
அருள்திரு குகஸ்ரீ இரசபதி அடிகள்	...	43
மறக்கலும் ஆமோ ?	...	45
ஒரு வேண்டுகோள்	...	47
சமாசப் பணியாளர்கள்	...	49
அநுபந்தம் : சமாச 62-ஆவது ஆண்டு அறிக்கை		1-16

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாசச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 25-2-68 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9-30 மணிக்குச் சமாசச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, பிற செய்திகள் பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் தவறுது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

செயலாளர்

இவ்யாண்டு ஆயுள் உறுப்பினர் ஆன சமாச அன்பர்களின் விவரம் வருமாறு:—

(1) திரு. R. திருநாவுக்கரசு அவர்கள், உரிமையாளர் Fair Deal Auto Parade, கும்பகோணம், தஞ்சை மாவட்டம்

(2) திரு. P. கோவிந்தசாமி அவர்கள், 15-A. சின்னப்ப முதலி தெரு, மஞ்சக்குப்பம், கடலூர்-1. தென்னூர்க் காடுமாவட்டம்

(3) திரு. ரா. ஆறுமுகம் அவர்கள், இராசாத் தெரு, புஞ்சைப் புளியம்பட்டி, கோவை மாவட்டம்.

(4) திரு. க சுந்தரராசன் அவர்கள், புங்கமுத்தூர், உடுமலைப்பேட்டை வழி, கோவை மாவட்டம்.

(5) திரு. ப. கு. சுப்பையன் அவர்கள், புது அய்யம்பாளையம், நம்பியூர் அஞ்சல், கோவை மாவட்டம்.

இப்பெரியார்களைப் போன்று மற்றவர்களும் ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துகொள்ளல் நலம். தாமும் சேர்தலோடு தம்மைச் சார்ந்த நண்பர்களையும் சமாச உறுப்பினர்களாகவோ ஆயுள் உறுப்பினர்களாகவோ ஆக்கி, சமாசத்தின் சமயத் தொண்டுகளுக்கு ஒல்லும் வகையான் உதவ வேண்டுகின்றோம்.

(துணையாசிரியர்)

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் முதற் சமயக் கட்டளையின்படி நம் சமாசச் சார்பில் 24-1-68 புதன் மாலை சென்னை கபாலீச்சுரர் ஆலயத்தில் திரு. மா. ப. தியாகராச முதலியார் அவர்கள் தலைமையில் வித்துவான் அம்பை. இரா. சங்கரனார் அவர்கள் "திருநீலகண்டர்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

மாசித் திங்கட் சிறப்பு நாள்கள்

2 (14-2-68) மகாமக விழா
5 (17-2-68) எறிபத்த நாயனார் விழா
12 (24-2-68) காரி நாயனார் விழா
14 (26-2-68) மகா சிவனிரவு விழா
16 (28-2-68) கோச்செங்கட்சோழநாயனார் விழா

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் ளாடு.

மலர் 41	பிலவங்க ஆடு மாசி 1968 பிப்ரவரி	இதழ் 2

சைவசித்தாந்த மகா சமாஜ 62ஆம் ஆண்டு விழாத் தொடக்க வுரை

(திருமதி, R. இராதா அம்மையார், குடந்தை)

இந்த மேடைமீது நிற்பது என் சைவப்பற்றுலே தவிர சைவ சமய உண்மைகளை ஆழ்ந்து படித்ததினுல் அன்று. சமாசக் கூட்டம் நடக்கும் இடமான திருவெண்காட்டைப் பற்றித் தீர எண்ணிக்கொண்டிருந்த பொழுது இரு சைவ சமயத் தொடர்பான கருத்துக்கள் தோன்றி இந்தத் தொடக்கவுரை நிகழ்த்தும் பேற்றை என்னை ஏற்றுக் கொள்ள வைத்தன. ஒன்று இந்தத் திருவெண்காட்டுக்கே உரியது; மற்றது பெண்ணுகடத்தைப் பற்றியது. இவ்விரண்டு தலங்களும் மெய்கண்டாரின் தொடர்பு பெற்றவை அல்லவா? திருவெண்காட்டில் சமாசக் கூட்டம் நடைபெறும் என்று படித்தவுடன், திருவெண்காட்டுத்

தலப்பெயர் தாங்கிய திருவெண்காட்டு நங்கையாரைப் பற்றித்தான் நினைவு எழுந்தது. சிறுத்தொண்ட நாயனர் மனிதர் யாரும் செயற்கரிய செயலாம் பிள்ளைக்கறி சமைத்த பெருந்தொண்டரானபோதும், தம்மை அடியார்க்குப் பணிபுரியும் "சிறுத்தொண்டன்" என்று சொல்லிக் கொண்டார். அவர் மனையாளாகிய திருவெண்காட்டு நங்கையார் தம் தொண்டைப்பற்றி என்னவென்று சொல்லியிருப்பார்? தம் கணவருக்குத் துணை செய்து, சிவத்தொண்டு செய்தாலும், தம்முடையது மிகச் சிறிய தொண்டு என்றுதானே சொல்லிக்கொண்டிருப்பார். அவ்வண்ணம் நாமே சைவத்துக்குள் நுழைந்து படித்துப் பேறு பெற வாய்ப்பில்லையாயினும், சமாசத்துக் கூட்டத்தில் கலந்து, கேட்கும் வாய்ப்பிலாவது நமக்குப் பங்கு கிடைக்கட்டுமே என்று நினைத்தது என் முதல் நினைவு. இரண்டாவது திரு மெய்கண்டாரின் நினைவுத் தொடர்பினுல், பெண்ணுகடத்தின் பெருமை நினைவுக்குவந்தது. நினைந்தோ நினையாமலோ பூசித்தவர்க்கு, அன்பின்றிக் கைகூப்பினுலே பெண்ணுகடத்தின் சிவபிரான் முத்திதருவார்என்பதுஐதீக மன்ருே? அதன்படி சைவத் தொண்டில் முனைந்து நிற்காவிடினும், தானே வாய்ப்புக்கிடைத்து அத்தொண்டில் ஒரு பகுதியை ஏற்கும் பேறுகிடைப்பதை விடுவானேன் என்ற எண்ணம் எழுந்தது. எனவே நச்சினர்க்கு இனிய எம் பெருமான் தொண்டில் கலந்துகொள்ளும் இனிய நல்வாய்ப்பாகவும் எண்ணி, இவ்விழாவிற்கு வந்தேன்.

அடுத்து இத்தொடக்கவுரை இன்று சமாசத்தின் 62-ஆம் ஆண்டு விழாக் கூட்டத்துக்கன்ருே; இங்குள்ள யாவருக்கும் சமாசத்தின் தொண்டுகளைப்பற்றித் தெரியுமாயினும், சமாசம் ஆற்றிவரும் தொண்டைப்பற்றி ஒரு சில வார்த்தைகள், சொல்ல விரும்புகிறேன். தமிழ் வளர்ந்ததும், நின்று நிலவுவதும் சமயத்தால் என்று சொன்னுல் மிகையாகாது. பழைய தமிழ் நூல்களில் 80 விழுக்காடு சமய நூல்களே. இப்படி மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகிய நூல்களை எத்தனைத் தமிழர்கள் படித்திருந்தார்கள் என்று முன் நிலையை ஆராய்ந்தால் விரல்விட்டு எண்ணவேண்டுமே தவிர நூற்றுக்கணக்கில்

கூட இல்லை. சமாசம் மலிவு விலையில் சிறிதும் ஊதியங் கருதாது எல்லாச் சமய நூல்களையும் வெளியிட்டுப் பரப் பிற்று என்றால் இதுவெறும் பேச்சன்று; மிகையும் அன்று. முழு உண்மை. எல்லாரும் சிறுகச்சிறுக இந்த அடக்க விலை நூல்களை வாங்கிப் படிக்க வாய்ப்பு உண்டாயிற்று. இப்படி சமையத்தையும் சமையத்தோடு தமிழையும் சேர்த்து வளர்த்த பெருமை சமாசத்துக்கே உரியது என்று நான் கருதுகிறேன். இப்போது சமாசத்தின் தொண்டின் தூண்டுதலால் கழகங்களும் மடங்களும், புத்தகததைப் பதிப்பிக்கும் வாயிலாகச் சைவசமயத்துக்கு நல்ல தொண்டு கள் புரிகின்றன. இப்படிப்பட்ட நல்ல தொண்டின் தூண்டுகோலாக நின்ற பெருமை சமாசத்துக்கே உரித் தானது அடுத்து சமயப்படிப்பில் பழுத்த பெரியவர்களை, இப்படிப்பட்டநல்ல கூட்டங்கள் கூட்டித் தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்தும் நல்ல செயலையும் செய்கிறது. பற்று மட்டும் கொண்டு, சமயப் படிப்புக்கு நேரமில்லாதவர் களையும் இழுத்துவைத்துக் கேள்வி ஞானமாகிய செவிக் குணவையும் கொடுத்து, படிக்கவும் வைக்கிறது. போட்டி கள் வைத்துப் பரிசுகள் தருவதன்மூலம் இளம்பிள்ளைகளை சமயக் கல்வி பெற ஊக்குவிக்கிறது. சமாசத்தின் மாத இதழான 'சித்தாந்தம்' கூட ஒரு நல்ல தொண்டு செய் கிறது. சமயச் சார்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளியிட்டும், திருத்தங்களின் பெருமைகளைப் பற்றி எழுதியும், சமயப் பெரியவர்களைப்பற்றியும், தமிழ் நாடு பரக்க நடக்கும் சமயத் தொடர்பான பல நிகழ்ச்சிகளைக் கோவையாக எடுத்து விளக்கியும். சமய உலகைப்பற்றிய செய்திகளை விளக்கமுறத் தருகின்றது. இவ்வாறு இடை யீடின்றித் தவறாது, சமய அறிவு மங்காது ஒளிரப் பல வகையானும் தொண்டு செய்யும் பெருமைபெற்ற சமாசத் தின் எல்லாத் தொண்டுகளும் மேலும் பெருக என்று எம்பிரானின் திருவடிகளை எண்ணி வாழ்த்தி இவ்விழா வைத் தொடங்குகிறேன்.

"தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற உளங்கொண்டு தாம் பெற்ற சிவஞானத்தை, ஞானப் பேரின்பத்தை உலகத்தார் உய்ய சிவஞான போதமாக

வடித்துக்கொடுத்த திரு மெய்கண்டார் தோன்றக்காரண மாய தலம் இது. ஆகையால் சிவஞான போதத்தைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் இங்குக்கூறுவது பொருந்துமென்று கருதுகிறேன். சித்தாந்தத்தின் சாரத்தை வடித்துக் கொடுக்கும் சாத்திரமாகிய சிவஞான போதத்தைத் தமிழ ருக்கு அளித்த ஞானப் பெரியார் திருமெய்கண்டார். சிவ ஞான போதம் சித்தாந்திகளின் முதல் நூல். இலக்கணம் போன்று 12 சூத்திரங்களில் சித்தாந்தத்தின் சாரத்தை வடித்து அவர் கொடுத்திருக்கிறார். சித்தாந்தத்தின் குறிப்பு சின் முத்திரை என்று சொல்வார்கள். மலம் கன்மம், மாயை மூன்றையும் நீக்க, பாசம் நீங்கி ஆன்மா இறைவனைச் சேருகிறது என்பதுதான் சித்தாந்தத்தின் உண்மை. இதை விளக்கும்படியாக பதியின் இலக்கணம், பாச இலக்கணம், பசுவின இலக்கணம் முதலிய சொல்லிய தோடல்லாமல், உயிரின் தன்மை, கரணங்களின் தன்மை, அறிவின் செயல் முதலியவற்றையும் விளக்கி, உயிர்மூன்று மலங்களையும் நீக்கி எவ்வண்ணம் சிவனுடன் சேருவது என்று வழியையும் விளக்கி அருளி இருக்கிறார் மெய்கண் டார்; புராணக் கதைகளின் கூட்டத்தில் சமயக் கொள்கைகளைக் கண்டுகொள்ள நாட்களாகும்; திருமுறை களைப் பாராயணம் செய்வதால் பக்தி பெருகுமே ஒழிய சமய உண்மைகளைக்கண்டுகொள்வது எளிதன்று. எனவே இவ்விரண்டையும் போலன்றி இலக்கண முறையாகச் சைவ சித்தாந்தத்தை வடித்துக்கொடுத்த பெருமை மெய் கண்டாருக்கே சேரும். சூத்திரக் கருத்துக்களைக்கொண்டு அழுத்தம் எது சித்தாந்தம் என்று சொல்லிவிடலாம்.

ஆனல் இங்கொரு உவமை சொல்ல விரும்புகிறேன். 'எழுகடலைக் குறுகத் தரித்த குறளின்' பெருமைபோலத் தெளிவாக இலக்கண முறைமையாகச் சைவ சித்தாந்தத் தைச் சுருங்கச் சொல்ல, (Definition) என்று ஆங்கிலத்தில் சொல்லும்படி, சூத்திரமாகச் சிவஞான போதம் உள்ள போதிலும், விரித்துக்கூற எழுந்தால் ஒவ்வொரு சூத்திரத் திற்கும் ஒரு நீண்ட விளக்கம் தருமாறு அது பொருள் செறிவுடன் அமைந்துள்ளது.

12 சூத்திரங்கள் அமைந்த அழகைப் பற்றியும், கோவையைப் பற்றியும் எண்ணும்பொழுது 12 திருமுறைகள் பற்றிய ஒரு கருத்தும் நினைவிற்கு வருகின்றது. திருவாவடுதுறை ஆதீனத்தாரின் 'பதிப்பான சிவஞான போதமும் பன்னிரு திருமுறையும்' என்ற வெளியீட்டில் திரு முறைகளின் அடுக்கு அமைந்தபடியே பதி, பசு, பாசம், உண்மை இலக்கணம், சாதிக்கும் முறை, பயன் என்றபடி சிவஞான போத சூத்திரங்களும் அமைந்துள்ளன. திருமுறைகளை அமைத்த முறை கால வரிசையில் அன்று என்பது முதல் திருமுறை, திருஞானசம்பந்தர் தேவாரமும், கடைசி சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமும் இருப்பதிலிருந்தே தெரிகிறது. எனவே சித்தாந்த உண்மைக்கு ஒப்ப, வரிசைப்படுத்தி, திருமுறைகளை அமைத்திருக்கிறார்கள் என்பது தெளிவு. அவ்வண்ணமே சூத்திரங்களும் அமைந்திருப்பதால் அவ்வடிப்படை உண்மைகளைக் கருத்திற்கொண்டே சூத்திரங்களை அமைத்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. இங்கு இதைப் பற்றி நான் சொல்லவந்தது ஒரு காரணம் பற்றியே. சித்தாந்த உண்மைகள் பலவகையாக இருந்தவற்றை விளக்கமுற ஒன்று சேர்த்துச் சுருக்கிச் சூத்திரவடிவாக அமைத்து நமக்களித்த பெருமான் மெய்கண்டார் என்று குறித்துச் சொல்லவே திருமுறைகளின் வரிசையைப்பற்றிக் குறிப்பிட்டேன்.

இந்த இடத்தில் சிவஞான போதத்தைப் பற்றிச் சிலர் தவறாகப் பேசும் ஒரு கருத்து நினைவில் உறுத்துகிறது. சிவஞான போதத்தை வடமொழியிலுள்ள இரௌரவ ஆகமத்தில் பாவ விமோசனப் படலத்திலுள்ள 12 சூத்திரங்களின் மொழிபெயர்ப்பென்று சிலர் சொல்லுகிறார்கள். இதைத் தமிழ் முதல் நூலே என்று ஐயந்திரிபு அறப்பல அறிஞர்கள் வாதாடி இருக்கிறார்கள். சிவஞான போதத்திற்கும் வடமொழி இரௌரவ ஆகமத்திற்கும் பலவற்றில் கருத்து, சொல்லமைப்பு முதலியவற்றில் மாற்றம் இருக்கிறதென்றும், இரௌரவத்தின் வேறு சில சுலோகங்களில் தீட்சை செய்யும் முறையைப்பற்றிக் கூறுகையில் சீடன் கையில் 'சிவஞான போதமென்னும் சாத்தி

ரத்தைக் கொடு' என்ற பொருளுள்ள வாக்கியம் இருக்கிறது என்றும், அதனால் சிவஞான போதமென்று வடமொழியில் வேறு தனி நூல் இன்மையால் அது தமிழ்ச் சிவஞான போதத்தையே குறிப்பிட்டது என்றும் சில அறிஞர்கள் தெளிவித்திருக்கிறார்கள்,

"..............இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடுவல்வினை இன்றே''

என்ற சிவஞான போதத்தின் 10ஆம் சூத்திரத்தின் வரிகள் நினைவுக்கு வருகின்றன. இறைபணி நின்று, மலம், மாயை, வினை யாவையுந் தவிர்த்து நின்ற மெய்கண்டாரது சிவஞான போதத்தையே ஆய்வுக்குள் அழுத்துவது நல்லதன்று. இப்பொழுது உள்ள சமயப் பற்றுக் குறையைப் பார்க்கும்பொழுது இப்படிப்பட்ட போட்டிகளை வளர்ப்பது தேவையில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

உயிர் தன் உள்ளத்தையும், அறிவையும் சேர்த்து ஞானமும், அருளும்பெறும் வழியை இன்றைய உலகியலில் காணோம். வள்ளுவர் பெருமான் சொல்லியதில் ''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'' என்பதைக் கொண்டுதான் இன்றைய உலகம் இயங்குகிறதே அல்லாமல் 'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை' என்பதை எண்ணுவதாகக்கூடத் தெரியவில்லை. ஐம்புல வேடரின் தேட்டைகளின் நிறைவுக்கே ஓடித் தன ஊனைத்தான் வளர்த்து, வெறும் சட அறிவைப் பெறுத்தான் இன்றைய உலகம் வாய்ப்பளிக்கிறது. அருள் அறிவும், ஞானமும் பெறும் வழியே தெரியாது போயிற்று. உலகத்தேட்டை விட்டு ஞானம்பெற ஒரு குரு தேவைப்படுகிறது. உண்மையான குரு வாய்க்காவிடினும் மெய்கண்டாரின் இறுதிச் சூத்திரத்தின்படி ஆலயத்தையும் அடியவர்களையும் தொழுதால் நலம் என்ற பழக்கத்தை இன்றுள்ள இளையோர்களுக்குக் கற்பித்தல்

இன்றைய சமைய நிலையை எண்ணும்போது சமையம், காலப் போக்கில் மாறிய நிலையும், அதை ஒட்டி நம் வழித் துறையை அமைக்க வேண்டிய கட்டாயத்தையும் பற்றிச் சிறிது சொல்ல விரும்புகிறேன். சைவ சமையத்தின் பழமை ஆராய்ந்து முடிவுக்கு வந்து தீர்ந்துபோன ஒரு செய்தி. ஆனாலும், சைவ மகாநாடு ஆகையால் இந்து சமயத்தின் தொடர்பான—அதிலும் குறிப்பாக சைவ சமயத்தின் தொடர்பான—ஒரு கருத்தைப்பற்றி இங்குக் கூற விழைகிறேன். பஞ்சாப் மாநாணத்திலுள்ள மொகஞ் சோதாரோ, ஹாரப்பா முதலிய புதைபட்ட நகரங்களைத் தோண்டி எடுத்தபோது கிடைத்த அடையாளச் சின்னங்களால் சுமார் 5000 ஆண்டுகளுக்கும் பழமை வாய்ந்தது சைவம் என்பதுகண்கூடாகத் தெரிந்தஉண்மை. இப்படிப் பட்ட பழைய சமயத்தின் நிலை முன்பு தொடக்கத்தில் இருந்தபடியே இருக்க முடியுமா? வழிபாட்டு முறைகள் யாவும் மாறித்தான் போயிருக்கின்றன. இப்படிக் கால வெள்ளத்தால் இந்துசமயம் மாறப்பல காரணங்கள் இருக்கின்றன. முக்கிய காரணங்களாக இரண்டைச் சொல்லலாம். இந்து சமயத்தில் தெய்வங்கள் பல. தெய்வம் என்ற சொல்லைச் சிறிது பார்த்தால், தெய்வம் பல இருப்பதின் கருத்து விளக்கமுறும். மனிதனின் தேவைகள் பல—. செல்வம், கல்வி, உணவு, வெற்றி, மழை போல இன்னும் பல. தேவையைப் நிறைவு செய்யும் மனித சக்திக்கு அப்பாற்பட்டதைத் தெய்வம் என்று பெயரிட்டார்கள். எனவே, பல தேவைகளை நிறைவு செய்யப் பல தெய்வங்களைப் படைத்தது இந்து சமயம். எல்லாம் வல்லதையும், இத் தெய்வங்களை ஆளும் பெரும் ஆற்றலையும் கடவுள் என்று பெயரிட்டார்கள், தன் தேவைக் கேற்பவும், விருப்பத்திற்கு ஏற்பவும் படைக்க, தெய்வங்களின் எண்ணிக்கையும் அதிகமாகி விட்டன. இப்படி தன் தேவைக்குத்தக்க தெய்வத்தையும், அதை வணங்கும் வழி முறைகளையும், அமைத்துக்கொள்ள, ஒரு கூட்டத்துக்கு ஒரு வகையாக, பல பழக்க வழக்கங்கள் சமயத் தொடர்பானவை, இந்துக்களுக்குள் அமைந்து விட்டன. இது இந்து சமயத்தில் பல வகையான வழிபாட்டு முறைகள்

உன்னதற்கான முதல் காரணம். இரண்டாவது காரணம் இந்திய நாட்டில் வந்து வளர்ந்து இந்து சமயத்துடன் கலந்துவிட்ட மற்றச் சமயங்களின் கோட்பாடுகள். உதாரணமாக இஸ்லாமியம். கிறிஸ்தவம் இரண்டின் கோட்பாடுகளும் ஓரளவு இந்து சமயத்துடன் ஒன்றிக் கலந்து போயிருக்கின்றன. இதைப்பற்றித் தெளிவாக திரு. ஹுமாயூன் கபீர் என்ற கல்வியாளர் தன் புத்தகமான (Our Heritage)ல் விவரமாக எழுதியிருக்கிறார், நம்சமயத்தில் யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய கொள்கைகள் இப்படிக்கலந்து போயிருக்கின்றன. எனவேதான் இன்று நாம் காண்கின்ற இந்து சமயம் தனிச் சமயம் அன்று என்று சொல்லத் தோன்றுகிறது; பல சமயங்களின ஒரு அழகிய கலவை என்று எண்ண நேருகிறது. நம் சமயம் இப்படி வளர்ந்து ஆல் போல் பெருகி இருந்த போதிலும் தனக்கென்றுள்ள தனித் தன்மையை இழந்துவிட்டுள்ளது. அதன் முடிவு கிறிஸ்தவம், முகமதியம் இவற்றிலுள்ள ஒரு குறிப்பிட்ட தனித் தன்மையோ, ஒரே மாதிரியான வழிபாட்டு முறையோ நம் சமயத்தில் காண முடியவில்லை. இதன் பயனாகப்பல திறப்பட்ட முறைகள் நம் சமயத்திடையே சிறுகச்சிறுக வளர்ந்து, அதனால் பலர், சமயம் மாறும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதைத்தவிர்க்க நம்மிடையே சிறு, சிறு முயற்சிகள் நடந்தபோதிலும் பெருமளவில் ஒன்றும் செய்யவில்லை. எனவே இந்த சமய மாற்றம் இன்றும் நடந்துகொண்டே இருக்கிறது. இதைப் பற்றிப் பேசும்போது இன்றைய சமயப் பொது நோக்கு சமயச்சார்பற்ற பொதுத்தன்மை முதலியவை பற்றி எண்ணத் தூண்டுகிறது. நாத்திகம் கூட தீவிரமாக இருந்தால் மாறுகின்ற நிலை வரலாம்; நாத்திக நரேந்திரர் ஆத்திகர் ஆனதுபோல்.ஆனால் பொது நோக்கு. சமயச்சார்பற்றமை என்றநிலையில் உள்ளவர்களை மாற்றுவது மிகவும் தொல்லை; மாற்றவும் முடியாது. ஏதாவது கொள்கையில் தீவிரம் இருந்தால் அன்றோ எதிலாவது ஒரு பிடிப்பு ஏற்பட? இப்படிப்பட்ட ஒட்டின்மை, நினைத்தபடி தம் கொள்கைகளை மாற்றும் சந்தர்ப்பவாதியாக ஒருவனை மாற்றும். ஏதாவது ஒரு சமயத்தில் பற்றுடன் ஒழுகுவது

தான் நல்லது; இப்படி சமயச் சார்புடன் சேராத ஒழுக்கம் உப்பில்லாத சமையலைப் போல ஆகிறது. சாதாரண வீட்டுப் பழக்க வழக்கத்திலேயே பார்க்கிறோம். தாய்மீது கொண்டுள்ள ஒட்டும், நம்பிக்கையும், ஒருவனை நல்ல முறையில் வளர்க்கக் காரணமாக இருக்கின்றன. அதே குழந்தை தாயற்ற சூழ்நிலையில், பெரும்பாலும் வேறுவிதமாக வளர்கிறது வீட்டுக்குத் தாய்போல, சமூகத்துக்குச் சமயம். ஒருமுறை சமய மாற்றத்தைப் பற்றிய பேச்சு எழுந்து காந்தியடிகள் "சமயம் எனக்கு என் மனைவியைப் போல; அதை மாற்றுவது எப்படி மற்றவர்களுக்கு முடிகிறது?" என்று கேட்டாராம். எனக்குத் தோன்றுகிறது சமயம் தாயைப் போல் என்று. சமயப்பற்று இல்லை என்றால் ஒரு கொள்கை என்று எப்படி ஒருவனுக்கு இருக்கும்? ஆன்மீகத் துறையைப் பற்றியே நான் பேசவில்லை. பொதுவான உலக வாழ்க்கையைப் பற்றியே நான் பேசவில்லை. பொதுவான உலக வாழ்க்கை பற்றியும், மனித சமூதாய ஒட்டுறவுக்கு வேண்டிய பொதுவாழ்வைப் பற்றியும் எண்ணி அதற்குரிய சமயத்தின் பற்றைப் பற்றித்தான் நான் இங்குக் குறிப்பிடுகிறேன். எனவே மனிதன் தனக்கே உண்மையுடனும், நேர்மையுடனும் இருக்க, உதவும் சமயத்தின் மீது பற்றுக்கொள்ள வேண்டுவது இன்றியமையாதது. அதற்கு வேண்டிவ வழிமுறைகளைப் பெரியவர்கள் வகுத்துக்கொடுக்க வேண்டும். சமையம் என்றாலே சமைக்கப்பட்டது என்பதுதானே. முன்னர் பெரியவர்கள் சமைத்துக்கொடுத்ததை இன்றைய உலக நிலைக்கு ஏற்பச் சிறிது சரி செய்து வகுத்தல் நலமென்று படுகிறது.

மேலேகுறிப்பிட்டபடிகலவையானநிலையில்சமயம்தன் வளத்தைச் சிறிது இழந்திருக்கிறதாகத் தோன்றுகிறது. அப்படி என்றால் பலவகைச் சமயங்களின் கோட்பாடுகள் சேர்ந்தால் தவறா என்றால், அதுவும் இல்லை" அப்படி பல கோட்பாடுகள் இணைந்திருப்பது பொன் குடத்திற்குப் பொட்டழகு இட்டாற்போல அழகிற்கு அழகுதான செய்கிறது என்று சொல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட அமைப்புள்ள ஒரு படிகம் (Prism) இருக்கிறது. அதன்

வழியாக ஊடுருவி சூரியனின் வெண் ஒளிக்கற்றையைப் பாய்ச்சினுல் ஏழுவண்ணக் கதிர்களாகப் பிரிந்து மறுபக்கத்திலிருந்து ஒளிக்கற்றை பாயும். ஏனெனில் நம் கண்களுக்கு வெண்மையாகத் தெரியும் ஒளிக்கற்றை உண்மையிலேயே ஏழு வண்ணக கதிர்கள் கலந்துள்ளவையே. அது போலத்தான் நம் சமையத்திலும் பல கோட்பாடுகள் அழகுற ஒன்றி ஒரே சமயத்தின் உருவாக அமைந்திருக்கின்றன. ஆகையினுல் இப்படிப் பிற சமையச்சேர்க்கையினுலும் ஒன்றும் குற்றமில்லை. ஆனுல் இன்றுள்ள நாட்டு நிலை சமைய ஒட்டுதலேஇல்லாதமுறையில் அமைந்திருப்பதும், சமரசம் என்று உயிரற்ற கொள்கை பிடிபட்ட நிலையில் இருப்பதுமே குற்றமாக இருக்கிறது. மற்ற சமையத்தாரின் விடாத சமயமாற்ற முயற்சிகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து இன்னும் நம் சமயம் இருக்கிறதென்ருல் நம் சமையத்தின் உயிர்ப்புத் திறத்தைப்பற்றி ஐயப்படவே தேவையில்லை. இந்த சமய மாற்ற நிலை மாற சமையத் தொண்டு செய்கின்ற ஊக்கமுள்ளவர்கள் உருப்படியாக ஒரு ஆக்கவேலை செய்தால் நலன் என்று எனக்குத் தோன்றுகிறது. கிறிஸ்தவ மடங்களைப்பார்த்தால் சமூகத் தொண்டின் வழியாலும், கல்விப் பணியின் மூலமும் அவர்கள் தங்கள் சமையத்திற்கு எவ்வளவோ தொண்டு ஆற்றுகிருர்கள் என்பது தெரிந்தது. அந்த முறையில் முயன்று இராமகிருட்டின மடத்தார் ஓரளவு வெற்றியும் பெற்று இருக்கிருர்கள. நம்மவர் ஒரு சிறிதளவு தான் வந்திருக்கிருர்கள். மேற்சொன்ன வண்ணமாக நம் சமாசத்தாரும் ஏதேனும் உருவாக்கமாகச்செய்தல் நலம் என்று நான் நினைக்கின்றேன். இலக்குமணன், இராமருடன் சென்றபோது கடவுள்தொண்டு கைகூடிய படியினுலே, 'கைங்கரிய ஸ்ரீ' பெற்ற பேறுடையான் இலக்குமணன் என்பார்கள் வைணவர்கள். அதைப்போலவே உழவாரப் படை கொண்டு தொண்டு செய்தார் அப்பர் பெருமான். அந்த அடி பற்றிப்பலவகைக் கோட்பாடுகளையும், வழிபாடுகளையும், உடைய நம் சமையத்தாருக்குக் குறிப்பிட்டு யாரும் செயயக்கூடிய வழியில் ஒரே மாதிரியான வழக்கத்தை உருவாக்கி அதை நடைமுறைக்குக்

கொண்டு வரத் தக்க வண்ணம் ஏற்பாடுகள் செய்து தொண்டு செய்யும் மனப்பான்மையும் வாய்ப்பும் உள்ள வர்கள் சேர்ந்துவேலை செய்யக் கூடிய பொதுப்பணி மன் றங்கள் அமைத்துத் தீவிரமாக முனைந்தால் அது நம் சமை யத்திற்குச் செய்யும் பெரிய தொண்டாகும். சமையப் பற்று உள்ளவர்களும், கல்வித்துறை, பிற துறையில் உள்ளவர்களும், கலந்து தொண்டு செய்யும் வண்ணமாக இந்த மன்றங்களை அமைத்து வாய்ப்பளித்தால் இன்னும் எவ்வளவோ நன்மை, ஊர்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரம் வைத்து சமயக் கல்வி பெற சிறியவர்களுக்கு ஏதே னும் ஏற்பாடு செய்தல் வேண்டும். கும்பமேளாவின் போது இந்துக்கள் மகாநாடு அமைத்து, பலவற்றைப்பற்றி ஆராய்ந்தது போல அடுத்து சீக்கிரமே வர இருக்கின்ற மகாமகத்தை ஒட்டியும் ஏதேனும் ஒரு சைவ மகாநாடு கூட்டி இப்படி ஒருமன்றம் அமைப்பதற்கான வழி முறை களைக் கலந்து எண்ணிச் செய்யுமாறு சமாசத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். சைவ ஆகமங்கள், திருமுறைகள் முதலிய பலவற்றின் தொகுப்பாகச் சைவ சித்தாந்தக் கருத்தை வடித்து மெய்கண்டார் அருளியது போல பல திறப்பட்ட வழிபாட்டு முறைகளைக்குறைத்து, தெளிவான ஒரு வழியை அமைப்பது பற்றியே சிவஞான போதத்தி னைப்பற்றி முன்னேடியாகத் தொடக்கத்தில் சொன்னேன்.

முடிக்குமுன் சித்தாந்தத் தலைமணியாகிய சிவஞான போதத்தைப் பற்றிப் புனைந்துரையாக ஒரு கருத்து தோன்றுகிறது. திருமறைக்காட்டில் இருந்து பொறுக் கிய பூக்கள் தேவாரம். தேவாரத்தின் முடிச்சுமணி சிவ ஞான போதம் என்பதுதான் அது. விளங்கச்சொன்னல் வேதம் காடுபோல விரிந்து அடர்ந்தது. அந்த வேதக் காட்டில் அதாவது மறைக் காட்டிலுள்ள மலர்களாகிய அருமையான கருத்துக்களைக் கொண்டது தேவாரம். தேவாரத்தைத் தேவு+ஆரம் என்றல் தெய்வத்துக்குரிய

மாலை என்றாகும். அல்லது தே+வாரம் என்று பிரித்தால் தெய்வத்துக்கு அன்பின் காணிக்கை என்றாகிறது. தேவு+ ஆரம் என்று கொண்டால் திரு மறைக்காட்டில் பறித்துக் கட்டிய தேவாரத்தில் அங்கங்கே உள்ள முடிச்சு மணிகள் சிவஞான போதமென்று சொல்லலாம். ஏனெனில் சைவ சித்தாந்தத்தின் சாரமே சிவஞான போதம் தான்.

திரு. மெய்கண்டாரின் பிறப்புக் காரணத் தலமாகிய திருவெண்காட்டில் இக்கூட்டம் நடைபெறுவதால் அவர் அருள்பெறுதல் பொருந்துமென்று எண்ணி அதைப்பற்றிச் சில வார்த்தைகள் பேசினேன். இனி இந்த மாநாட்டின் நினைவாக திரு மெய்கண்டார் இருந்து காட்டியபடி, ஆழ்ந்து பிடித்து தெளிந்த சமயப் பெரியவர்களாவது சமையத்தைக் கைக்கொண்டு பரப்பினால் நலம். பழம் பெருமைகளை மட்டும் பேசிக்கொண்டிராது இன்றைய நடைமுறைக்கு ஏற்றவண்ணம் சமயச்சார்பான வழி முறைகளைத் திருத்தமாக அமைக்க உதவ வேண்டும். பழைய சமய இலக்கியங்களைப் பிறர் எளிதில் அறியும் வண்ணம் ஆலயங்களிலும் பிற பொது இடங்களிலும் ஏற் பாடு செய்யவேண்டுமென்று வேண்டி இப்படிப்பட்ட பணி களில்இன்னும் அதிகத் தொண்டு செய்ய வேண்டுமென்று சமாசத்தாரைக் கேட்டுக்கொண்டு மெய்கண்டார் வேண்டி யபடி

"கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே"

என்று வணங்கி மாநாடும், சமாசமும் சிறப்புற நடந்தும், வளர்ந்தும் செவ்வனே இருக்க இறைவனை இறைஞ்சு கிறேன்.

அருகன் துதியும் அப்பரும்

(ஆசிரியர்)

திருவெண்காட்டில் நடைபெற்ற சமாஜ இளைஞர் மகா நாட்டில், அப்பர் சுவாமிகள் திருநறுங் கொண்டை அப் பாண்டை நாதர் மீது ஒரு தாணடகப் பதிகம் பாடினார் என்ற கருத்துச் சொல்லப்பட்டது. இது பற்றிச் சில கருத் துக்களை இங்குக் கூறுதல் அவசியம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைன சம யத்தோத்திர நூல்கள் சில அச்சிடப்பட்டன; ஜினதா சர்கள் செய்த பத்து, பதிகத் திரட்டு, திருப்பாமாலை முதலாயின. இவற்றுள், தோத்திரத் திரட்டு என்பது 1912 இல் அச்சிடப்பட்டது. 27 பதிகங்கள், 299 பாடல் கள் உள்ளன திருநறுங் கொண்டைமலை, தீபங்குடி, பருத்திக்குன்றம், பரம்பூர், மயிலாப்பூர் ஆர்ப்பாக்கம் முத லான தலங்கள், அருகதேவன், சாத்தா, தர்மதேவி முதலி யோர் தோத்திரங்கள். இவற்றுள் இரண்டாம் பதிகம் 'திருநறுங் கொண்டை அப்பாண்டை நாதர் பேரில் அப்பர் பாடியபதிகம்' என அச்சிடப்பட்டுள்ளது; 11 பாடல்கள். எடுத்துக் காட்டாகப் பின்வரும் பாடலைக் காண்க :-

மானனைய விழிகாட்டி முகத்தைக் காட்டி
வண்கலச முலைகாட்டி மாலை பூட்டும்
தேனனைய மொழிமடவார் அல்குற் பாம்பு
தீண்டிவிட மேறி மிகத் தயங்கலாமோ
ஓநமோ நமோர்கந் தாண மென்றே
உச்சரித்தே உன்னடிப்பா லுறவே வேண்டும்
நானிலமென் நறுங்கொண்டை அருகா உன்னை
நம்பினேன் நின்பதத்தை நல்குவாயே.

இப்பாடலுக்கும் அப்பர் சுவாமிகள் அருளிய திருத்தாண்ட கத்துக்கும் நெடுந் தூரம். தாண்டகம் பாடிய அப்பர் சுவாமிகள் இளமையில் தாம் புறச் சமயம் சார்ந்திருந்த போது இப்பதிகம் பாடினார் என்பது பொருத்தமில்லாமலி

ருக்கிறது. திருநறுங்கொண்டைப் பதிகத்தின் நடையை நோக்கும் போது, அது 15–ஆம் நூற்றாண்டின் பின் எழுந்த நூலென்று தோற்றுகிறது.

அப்பர் சுவாமிகளுக்குச் சைவ சமயத்தில் உள்ள பெருஞ் சிறப்புக் காரணமாக, இப்பதிகம் அப்பர் பெயரில் சுமத்தப்பட்டுள்ளது என்று கருத வேண்டும்; அல்லது உண்மையாகவே இதை அப்பர் என்ற ஒருவர் பாடியிருந்தாரானால், அப்பர் என்பது பொதுப் பெயராதலால், யாரோ ஒருவர் பிற்காலத்தில் (15–ஆம் நூற்றாண்டின் பின்) அப்பர் என்ற பெயரை வைத்துக் கொண்டு இப் பதிகம் பாடி வைத்தார் என்று கருத வேண்டும்.

ஒரு பெரிய புராணக் குறிப்பும் இங்குக் கருத வேண்டும். திலகவதியாரால் சைவ நெறிக்கு மீண்டும் ஆற்றுப் படுத்தப் பெற்ற மருணீக்கியார்,

திரைக்கெடில வீரட்டா னத்திருந்த செங்கனக
வரைச்சிலையார் பெருங்கோயில் தொழுதுவலங்
கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால்
உரைத்தமிழ்மாலைகள்சாத்தும் உணர்வுபெற
உணர்ந்துரைப்பார்

என்று சேக்கிழார் கூறுகிறார். சிவபிரான் திருவருளால் தமிழ்மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றார் என்று கூறுகிறார். இதனால் இம்மருணீக்கியார் முன்னமே கல்வியில் மிக்க வல்லவராயிருந்தாலும் கூட, தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றவரல்லர் என்பது பெறப்படும். அவர் சைன சமயத்தில் தரும சேனராக விளங்கிய காலத்து, கல்வியில் நிரம்பியவர்; சைன சமய உணர்வில் நிரம்பியவர்; ஆனால் தமிழ்ப் பாடல் பாடும் ஆற்றலில் நிரம்பியவரல்லர்; ஆதலால் அக்காலத்தே அவர் அருகன் தோத்திரம் பாடினாரல்லர் என்பது தெளிவாகிறது.

அன்றியும். சமயம் வல்லாரெல்லோரும் தமிழ் மாலை பாடும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும் என்ற நியதி

இல்லை. மற்றும் நமக்கு அப்பர் சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றுக்கு ஆதாரமாயுள்ளது, சேக்கிழார் திருவாக்கேயாகும்; மருணீக்கியார் சமண சமய அருங்கலை நூல் பயின்று அவர்களின் மேலாந் தருமசேனர் என்னும் பெயர் பெற்றார் என்று கூறுகின்றாரேயன்றி, அச்சமயத்தில் பாடலோ நூலோ செய்ததாகக் கூறவில்லை.

எனவே, குறிப்பிட்ட பதிகம் அப்பர் என்ற தலைப்புப் போடப்பட்டதனாலேயே அப்பமூர்த்திகள் செய்த தாண்டகத்தை ஒத்த பதிகமாகி விடாது. அன்றியும், பதிகப் பாடல், எண்சீர் ஆசிரிய விருத்தம்; ஓரடியை இரு பாதியாக்கி, ஒவ்வொரு பாதியிலும் முதல் இரு சீர்களும் காய்ச்சீராகவும், மற்ற இரண்டும் மா, தேமா என வரும்படி அமைக்கப் பெற்றவை. ஆனால் தாண்டகமோ, எண்சீர் விருத்தத்தை ஒத்திருந்தாலும், முழுமையும் இந்த யாப்பிலக்கணம் அங்குப் பொருந்தவில்லை.

ஆகவே, நடையாலும், பொருளாலும், வரலாற்றாலும் யாப்பாலும் அப்பர் சுவாமிகள் பாடலுக்கும் இப்பதிகத்துக்கும் தொடர்பில்லை என்பது தெளிவு.

இவ்விதமே, குறிப்பிட்ட சைனத் தோத்திர நூலில் இதை அடுத்த பதிகம் 'திருநறுங் கொண்டை அப்பாண்டைநாதர் பேரில் சம்பந்தர் பாடிய பதிகம்' என்று தலைப்பிடப்பட்டு, 11 பாடல்கள் கொண்டதாயிருக்கிறது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல் காண்க :—

மெய்யனே பரந்தகண்டமும் விரிந்தபேரொளியே
வீதராகனே நாதனேவிமல வச்சுதனே,
உய்யனே சம்பந்தவற்கருளிய வொப்பேவொப்பிலாததோ
ரொப்புடை யொளி மணிச்சுடரே
கையனே பரந்தறநெறி காட்டிய கணக்கேகால
காலனே மூலமந்திர முதற்பொருளே
அய்யனே திருநறுங்கொண்டை வடதிருமலை மேல்
அப்பனே யடியெனையும் அஞ்சலென்றருளே,

இங்கு சம்பந்தர்க்கருளிய ஒப்பே' என்று வருவதாலும், சம்பந்தர் திருவாவடுதுறைத் தேவாரத்துள் 'அடியேனை அஞ்சலென்றருளே' என்று அமைத்திருப்பதாலும் இப் பாடல் கொண்ட பதிகத்துக்குச் சம்பந்தர் பாடிய பதிகம் என்று பெயர் சூட்டி விட்டனர் போலும். இதற்கும் சம் பந்தருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அப்பராவது சிறிது காலம் சைன சமய நெறி பற்றி ஒழுகினர் என்பது வரலாறு. சம்பந்தர் எப்போதுமே சைனருடைய ஒழுக் கத்தைக் கண்டித்து வந்தவர். ஆதலால் இப்பதிகம் சம யாசாரியரான சம்பந்தர் பாடியது என்பது போலிக் கூற்று. அப்பர் பாடிய பதிகமும் இதுபோலவே போலி என்றே கொள்ளத் தக்கது.

திருஎருக்கத்தம் புலியூர்

—: மு. அ. :—

இடம் :— தென்னார்க்காடு மாவட்டம் விருத்தாசலத்தி லிருந்து ஆண்டிமடம் ஜெயங்கொண்ட சோழபுரம் செல் லுகின்ற பேருந்து வழியில் இரண்டு கல் தூரத்தில் உள் ளது. கோயில், சாலையிலிருந்து தென்புறம் ஒரு பர்லாங் தூரத்தில் உள்ளது.

பெயர் :— எருக்கங் காடு ஆனமையாலே எருக்கு அத் தம்; புலி பூசித்தமையால் புலியூர்; ஆகையால் எருக்கத்தம் புலியூர்; இப்போது இராசேந்திரப் பட்டணம் என்று வழங்குகிறது. நரேந்திரன் என்ற பாண்டியன், பிள்ளை யில்லாது வருந்தி இங்கு வந்து வழிபட்டு இராசேந்திரன் என்ற பிள்ளையைப் பெற்றமையால் இவ்வூர் இராசேந் திரப் பட்டணம் என்று பெயர் பெற்றது.

—வாடுமிடை

நீலமலர்க் கண்ணியுடன் நீளெருக்கத் தம்புலியூர்ப்
பாலுகந்த நீலகண்டப் பண்ணவா—.

இவ்வாறு நாம அட்டவணையில் சுவாமி அம்பிகையின் பெயர் நீலகண்டேசுவரர், நீலமலர்க் கண்ணம்மை என்றிருந்த போதிலுங் கூட, வழங்குகின்ற பெயர் குமார சுவாமி, வீறுர்முலை என்பனவாம். சம்பந்தர் தேவாரத்தில்,

வீறுர் முலையாளைப் பாகம் மிகவைத்துச்
சீறு வருகாலன் சினத்தை யழிவித்தான்
ஏறு னெருக்கத்தம் புலியூரி றையானை
வேறு நினைவாரை விரும்பா வினைதானே

(963-ஆம் பாடல்) எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. வீறு ஆர்-ஒப்பில்லாத அழகு பொருந்திய, தல விருட்சம் வெள்ளெருக்கு. இது நடு நாட்டுத் தலங்களுள் நான்காவது.

கோயில் :- கிழக்கு பார்த்த சந்நிதி. எதிரில் கந்த தீர்த்தம் என்ற பெயருடைய தாமரைக் குளம், கரை இடிந்த நிலையிலுள்ளது. வட, மேல் கரைகளில் சிறு கற்படித் துறைகள், மூன்று நிலையுடைய சிறு கோபுரம். கோபுர வாயிலில் விநாயகர்; வெளிச் சுவர் கிலமாயிருக்கிறது. மதில் சுவர் நல்ல நிலை; பெரிய கொடிக் கம்பம். சுவாமிக்கு வலப் புறத்தில் அம்பாள் கோயில். இதன் வெளிக் கோட்டங்களில் ஐந்து சத்திகள் உள்ளனர். உள் சுற்று இரண்டு கோயிலையும் சூழ்ந்தது. திரு மாளிகைச் சுற்றில் நிருதியில் மகா கணபதி. காசி விசுவநாதர், விசாலாட்சி. அடுத்து, முருகன் தேவியரோடு, இலக்குமி, நாராயணப் பெருமாள், சரசுவதி. சுவாமி கருவறைக் கோட்டங்களில் நிருத்த விநாயகர், உயரத்தில் சட்டநாதர், தக்கணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரமன், துர்க்கை பின் சண்டேசர். முன் மண்டபங்கள் கல்லால் ஆயின; கருவறைகள் செங்கல். புதிய நவக்கிரகங்கள்.

மூர்த்தி :- சுவாமி சுயம்பு. சிறிய திருவுரு, வாயில் உள்ள துவாரபாலகர் பெரிய உருவம். இரண்டு கைகள் உடையவர். சந்நிதிக் கெதிரில் திருநீலகண்டர் யாழேந்திய படி; மதங்கசூளாமணி யம்மையார் தாளம் ஏந்தியபடி; உற்சவ மூர்த்திகள் அனைவரும் உள்ளனர்,

யாவரும் வியக்கத்தக்க முறையில் மிகவும் பிரகாசமான வடிவங்கள். பழமையான கூத்தாடும் சம்பந்தரும், சுந்தரரும் உள்ளனர். நடராசத் திருமேனி மிகவும் சிறப்பானது. இங்கிருந்த பெரிய நடராசரை நெடுங் காலத்துக்கு முன்னமே விற்று விட்டார்கள் எனவும், அது அமெரிக்க மியூஸியம் போய் விட்டது என்றும் குருக்கள் சொன்னார். பெரிய சிவகாம சுந்தரி வடிவம் மட்டும் கவனிப்பின்றித் தனியே உள்ளது. இவர் அன்றி, கொஞ்ச நாளைக்கு முன் கோயிலில் ஓர் இடம் வெட்டிய போது கீழே புதையுண்டிருந்து கிடைத்த திருமேனி என்று ஒரு நடராச உருவும், அம்பிகையும் வைக்கப் பெற்றுள்ளன. இவர்கள் மிகவும் சிறப்பான அழகும் பொலிவும் மிக்க திருமேனியுடையர்; திருமுகப் பொலிவு மிகவும் சிறப்பானது. இவ்வுருவங்களன்றி வழக்கம் போல் பிற்காலத்து நடராசரவும் அம்பிகைவும் உள்ளனர்.

பாடல் :– சம்பந்தர் தேவாரம் குறிஞ்சிப் பண்ணில் ஒரு பதிகம். சிவப்பிரகாசர் என்பவர் 18-ஆம் நூற்றாண்டில் 476 பாடல் கொண்ட புராணம் பாடியிருக்கிறார். இது பன்னிரு சருக்கங்கள் உடையது.

அருணகிரி நாதர் 'பூத்தார் சூடும்' என்ற திருப்புகழில் யாழ்ப்பாணயன் பட்டணம் என்று இவ்வூரைக் குறிப்பிடுகிறார்.

வரலாறு :– திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்த தலம். அவர் விருப்பப்படி சம்பந்தர் இங்கு வந்து வழிபட்டார். தேவ கணங்கள் வழிபட்டமையால் கணேசுவரம் என்ற பெயருமுண்டு. திருவிளையாடலில் கூறியபடி வேதங்களை கடலில் எறிந்த குமாரக் கடவுள் ஊமையாகி இங்கு வந்து பூசித்து ஊமை நீங்கப் பெற்றார் என்பது தல வரலாறு. இது பற்றியே சுவாமி பெயர் குமாரசுவாமி. தவஞ் செய்து கொண்டிருந்த பிராமணனைக் கொல்ல வந்த புலியைக் கொன்ற வேடன் அப்புண்ணிய விசேடத்தால் புலிக்கால் முனிவராகப் பிறந்து இங்குப் பூசித்தமையால் இவவூர் புலியூராயிற்று. பிறர் வெட்டாத மரமா

கிய வெள்ளெருக்கம் மரமாகத் தேவர்கள் நின்று பூசிக்குங் காரணத்தால் இது எருக்கத்தம் புலியூர் ஆயிற்று.

கல்வெட்டு :- சுவாமி முன் மண்டபத்தின் உத்தரவரிகள், தூண் முதலியவற்றில் கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

நிர்வாகம் :- 100 ஏக்கர் நிலமுண்டு. நிர்வாக அதிகாரி உள்ளார். நாலு கால பூசை. முன்னர் திருவிழாக்கள் நடந்தன, வாகனங்கள் யாவும் உள்ளன. இப்பொழுது விழா இல்லை. கோயில் இப்பொழுது திருப்பணி செய்ய வேண்டிய நிலை. செய்யாவிட்டால் இலமாகக் கூடும்.

அருள் திரு குகஸ்ரீ இரசபதி அடிகள்
(துணையாசிரியர்)

அருள்திரு. பு.பா. இரத்தினசபாபதி நாயகர் அவர்கள் பிலவங்க ஆண்டு தைத்திங்கள் 3ஆம்நாள் (17—1—1968) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இறைவன் திருவடி நீழல் அடைந்தார்கள்.

சிவபுராணங்கள், சைவச் சொற்பொழிவுகளை எடுத்துக் கூறி மக்களைப் பத்திவலையில் ஆட்கொள்ளும் அடியார்கூட்டம் நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் மிக்கிருந்தது. அக்கூட்டம் போற்றுவார் இன்மையால் நாளுக்கு நாள் அருகிக் கொண்டே வருகின்றது: இத்தகைய பழம்பெரும் தொண்டர் கூட்டத்துள் ஒருவராய்த் திகழ்ந்தவர் நம் இரசபதி அடிகளாவார்கள். அவர்கள் சமயச்சொற்பொழிவாற்றும் போது திருவேடப்பொலிவழகு சிறந்துதோன்றும். 1936ஆம் ஆண்டில் ஓர் அன்பர் அடியேனை ஒரு சொற்பொழிவுக்கு அழைத்துச்சென்றார். கேட்பவர்கள் மிகச்சிறந்த பத்திமான்களாயிருந்தனர். சொற்பொழிவாளர் வெள்ளைக்கல்கடுக்கன், தங்கப்

பூண் கட்டிய உருத்திராக்கமாலைகள், அரையில் வெண்பட்டு, மேல் வெண்பட்டு, திருநீற்றுப்பூச்சு முதலிய பல சிறப்பு களுடன் 'கணீர்' என்ற ஒலியுடன் பேசத் தொடங்கினர். அப்பொழுதே அவர் உருவம் என் மனக்கண் முன் நன்கு பதிந்தது. அவரே நம் குகஸ்ரீ இரசபதி அடிகள் ஆவர். அதற்கும் முன்னரே அவர்கள் நம்சமயத் துறையில் தாமே பயின்று சிறந்து விளங்கிய பெருமகனாராவர். நம் சமயத் தொண்டு ஒன்றினையே தம் குறிக்கோளாகக் கருதி அல்லும் பகலும் அனவரதமும் உழைத்துவந்தார். பல அருள் நூல் களுக்கு உரை எழுதியிருக்கிறார். திருப்போரூர் முருகப் பெருமானிடத்து ஒருதனி ஈடுபாடு அவருக்குண்டு. திருப் போரூர்ச் சந்நிதி முறையைத் தொடர்ந்து கந்தசாமிகோயில் முதலிய பலவிடங்களில் சொற்பொழிவுகள் ஆற்றியிருக் கின்றார்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்த அப்பெருமகனார் தைப்பூசத்திற்கு வடலூர் சென்று இராமலிங்கர் அருளுப தேசத்தை மக்களுக்கு வாரிவழங்கினர். அதே எண்ணத் தோடு மறுநாள் சென்னை சேர்ந்தார். வீடு சேர்வதற்கு முன்னரே அவர் எண்ணம் இறைவன் திருவடியிலேயே பதிந்து விட்டது. வாடகை உந்தூர்தியிலேறி வீடு சேரும் போது அமரரையே சேர்ந்தார் எனின் அவர் அன்புப்பெருக் கைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ!

"நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமல்
பாயிற் கிடவாமல் பாவியேன்—காயத்தை
ஓர்நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து"

என்ற செய்யுளை அவர் வாழ்க்கையில் எத்துணை முறை கூறி யிருப்பார். பேரருளாளனும் அப்பெம்மான் அவர் விருப் பத்தை விருமபியவாறே நிறைவேற்றிவிட்டான். இறப்புத் துன்பம் சிறிதும் இன்றி அவர் இவ்வுலகை விட்டு நீங்கினர்: 69 வயது நிரம்பிய அப்பெரியார் இன்னும் சில்லாண்டுகள் வாழ்ந்து நம்மனோர்க்கு நல்வழி காட்டியிருக்கக் கூடாதா

என்பது சமயத்தொண்டர்களின் ஏக்கம். வருவாயைப பெருக்கிக் குடும்பத்தை நன்னிலையிலிருத்தியிருக்கக்கூடாதா என்பது அவர்கள் எண்ணம். மற்றும் பலரும் அவ்வவர் விருப்பத்திற் கேற்றுற் போன்று நினைப்பர். நினைத்து இவ் வுலகவாழ்க்கை கருதி வருந்துவது மியற்கையே. அவர்கள் எல்லாருக்கும் சமாசம் தம் வருத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆறுதலையும் பெறுமாறு வேண்டுகிறது. அப்பெரியார் உயிர் திருப்போரூர் முருகன் பேருட் பிழம் பில் கலந்து இன்புற்றிருக்குமென்பது உறுதி; அவன் நம்மையும் நன்னிலையிலுய்த்துச் செல்ல, அப்பெரியார் பேணிய நல்வழிகளை மனத்திருத்தி நம் வாழ்வை மேம்படுத்திச் சிறப் போமாக.

திரு. சுந்தரம்பிள்ளை

நம் சமாசப் பொருளாளராய் நெடுங்காலம் தொண் டாற்றிய திரு. சுந்தரம்பிள்ளையவர்கள் காலமானது தெரிந்து வருந்துகின்றோம். அவர் குடும்பத்தினருக்கு நம் வருத் தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலஞ்சென்ற அப்பெரியாரின் ஆன்மா நன்னிலையில் விளங்க எல்லாம் வல்ல பெருமான் திருவருள் சுரக்க வேண்டு கின்றோம்.

மறக்கலும் ஆமோ?

(சி. குமரேசப்பிள்ளை, நாகர்கோயில்)

உலகில் வாழும் உயிர்கள் யாவும் இன்பம் விழை கின்றன. இன்பம் அன்றித் துன்பம் விழையும் உயிர்கள் யாண்டும் இல்லை. இன்பமன்றித் துன்பத்தினை உயிர்கள் விழைதலும் இயலாது. ஏனெனின் பிறப்பின் நோக்கமே இன்பப் பேறெய்தல். அங்ஙனமிருக்கவும் உலகில் இன்பம் நுகரும் உயிர்கள் எத்தனை ? அச்சம் ஒருபுறம், இல்லையே யெனும் ஏக்கம் ஒருபுறமாகக் கனன்றெரிய, உலகவாழ்

வெறும் குழாய்க்குள் அகப்பட்டு இருதலைக் கொள்ளியினுள் ளெறும்பொத் துழல்வதல்லால் உறும் இன்பம் காணும் உயிர்கள் எத்தனை? வாழ்வில் கண்ட இன்பத்தையும் கணப் பொழுதில் இன்னொரு துன்பம் வந்து மறைப்பதாய் அமை கிறது. உணவு இல்லையேயென்ற கவலை; கிடைத்தால் அடுத்து எழுவது உடையைப்பற்றிய கவலை. பின், வீடு, மனைவி, மக்கள், நிலம் இவற்றுள் இல்லாத ஒன்றுபற்றி ஏக்கம்; எல்லாமிருப்பினும் தன்னினும் மிகுந்திருப்பவரைப் பற்றி உள்ளத்தாக்கல்; இருப்பதைப் பிறர் எடுப்பரோ வெனும் அச்சம்; இவற்றினுள்ளே உயிர்வாழ்வு. ஆண்டி முதல் அரசர் வரை இந்நிலையைத் தவிர வேறு காணோமே! இத்தகைய இலம்பாடு இல்லாத வாழ்வு அமையாதா? அமை யும் வழியில்லையா? அமைந்தவரில்லையா?

உண்டு; அமையும் வழியுண்டு; அறிந்தமைந்தவரும் ஒருசிலருளர்; வழியறியாது முயலுகின்ற காரணத்தால் அமையாதவர் பலராகவிருக்கின்றனர் என்கிறார் வள்ளுவர்.

"இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்"

என்பது அப்பெருந்தகையார் வாக்கு. உலகில் அச்சமும் வறுமையும் நிறைந்த இலம்பாடுடையவர்கள் மிகுந்திருக்கக் காரணம் நோற்பவர் மிகக் குறைந்தவர்; பலர் நோலாதவர். அறநெறியறிந்து, இன்பம் வரும் வழியறிந்து தவவாழ்வை மேற்கொள்ளாமையே இலம்பாட்டிற்குக் காரணம் என்கிறார். உணவிற்கு நெல் வேண்டும். நெல் நெல் என்று கூப்பாடு போட்டால் வருமா? நெல் கிடைக்கும் வழி வேளாண்மை யென்பதை யறிந்து, அதனை முறையறிந்து திறனறிந்து ஆற்றினால் நெல் தானே வந்து குவியும். அதுபோல இன் பம் இன்பம் என எங்கினால் இன்பம் வந்துவிட முடியுமா? இன்பம் வரும் வழியாகிய அறவழியை மேற்கொண்டால்—தவவாழ்வை மேற்கொண்டால்—இவ்வழி நின்ற இறைவனை மறவாது வழிபட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும். கேட்ட இன்பம்மட்டுமா வரும்? கேளாத இன்பமும்வரும்.

(தொடரும்)

ஒரு வேண்டுகோள்

(அம்பை. இரா. சங்கரனூர்,)
துணையாசிரியர்.

நம் சமாசம் உலகுக்கே சைவசித்தாந்தக் கொள்கையைப் பரப்புதற்கு என இற்றைக்கு 62 ஆண்டுகளுக்கு முன்னர் நம் மான்றோர்களால் ஏற்படுத்தப்பெற்ற ஓர் ஒப்பற்ற நிறுவனம் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வக் காலங்களில் நம் தமிழ் நாட்டிலும் அப்பாலுமுள்ள சைவ சித்தாந்தச் சமய நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அவற்றையெல்லாம் கிளை நிறுவனங்களாக ஏற்றுக் கைகோத்துச் செயலாற்றியும் வந்துள்ளது. பின்னர் அக் கிளை நிறுவனங்கள் தம் முன்னைத் தொடர்பிழந்து தனித்துச் செயலாற்ற முற்பட்டுக் கால நிலைக்கேற்பச் சில்லூர்களில் முன்னேறியும் சில்லூர்களில் ஆற்றலற்றும் காணப்பெறுகின்றன. அவ்வாறு வலி குன்றுவண்ணம் ஊக்கப்படுத்த, தாய் நிறுவனமாம் சமாசம் எப்போதும் ஆயத்தமாயுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவ்வம்மாவட்டங்களில் உள்ள ஆலோசனைச் சபையினரும் சிறப்பாகச் சமாச ஆயுள் உறுப்பினர்களும் பொது உறுப்பினர்களும் அங்கங்குள்ள சமய நிறுவனங்கள் யாவை என்பவற்றைச் சமாசச் செயலாளருக்குத் தெரிவித்தலோடு அவற்றைச் சமாசக் கிளை நிறுவனமாக ஆக்கிக்கொள்ள வேண்டுகின்றோம். அதற்குச் சமாசச் சட்டப்படி இணைப்புச் சந்தா ஆண்டொன்றுக்கு ரூபாய் ஐந்து செலுத்த வேண்டும்.

அவ்வாறு இணைக்கப்பட்ட சபைகளுக்குச் சித்தாந்த இதழ் இலவசமாக அனுப்பப் பெறுவதோடு சமாசத்தாரால் அவ்வப்போது வெளியிடப்பெறும் விலை குறிக்கப் பெருத வெளியீடுகளின் பிரதிகளில் ஒவ்வொன்றும் உரிய காலத்தே அனுப்பப்பெறும். மேலும் சமாச அவ்வப்போதைய நிகழ்ச்சிகளைத் தெரிவித்துக் கிளை நிறுவனங்களையும் ஊக்க வாய்ப்புண்டு. கிளைநிறுவனங்கள் பல ஒரு மாவட்டத்தில் இருக்குமேல் அவை அவ்வம்மாவட்ட நிலையில் ஒரு பெரிய கிளை நிறுவனத்தை நிறுவி மிக நல்ல முறையில் செயல்படலாம். அதற்கெனவே அண்மையில் திருவெண்

காட்டில் நிகழ்ந்த மாநாட்டில் நிறைவேறிய முடிவு ஒன்றினைச் சமயப் பேரன்பர்களுக்கு வெளியிடுகின்றோம்.

அது வருமாறு :—

சைவ சித்தாந்த மகா சமாசத்திற்கு இன்னும் அதிக உறுப்பினர்களைச் சேர்ப்பான்வேண்டியும் சமாசம் இன்னும் அதிகப் பயன்தரத்தகும் வகையில் திறம்படச் செயல் படுவான்வேண்டியும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிளைச் சங்கத்தைத் தோற்றுவித்துப் பணியாற்றவேண்டுமென்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தக்கார் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்திலேயே அடியிற்காணும் மாவட்டங்களுக்குப் பொறுபபாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென்னார்க்காடு—திரு. P. R. சுவாமிநாதன் எம். ஏ., எல். டி.

தஞ்சை—திரு. மு. அருணாசலம் எம். ஏ.

திருச்சி—திரு. கு. வரதராசப் பிள்ளை பி. ஏ.

செங்கற்பட்டு—திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், காஞ்சிபுரம்.

மதுரை—திரு. G. கலியாணம் பிள்ளை எம். ஏ.

இம்முடிவுப்படி இன்னும் பிறமாவட்டங்களுக்கும் தக்கார் சமயத்தொண்டாற்ற முன்வருவார்களாக. எல்லாச் சமய நிறுவனங்களும், சமாசத்தோடு தங்களை இணைத்துக் கொண்டு செயலாற்ற முற்படுவதாகுக. இதற்குச் சமாசத் தொடர்பான, சிறப்பாகச் சைவசித்தாந்தக் கொள்கை உலகெலாம் பரவ எண்ணும் உத்தமர்கள் யாவரும் தங்கள் உண்மை உழைப்பினை நல்குவார்களாக. பிறதுறைகளில் புதுப்புது முறையில் முன்னேற்றம் காண்பதுபோல் நாமும் சமயத்துறையிலும் மக்களை விழிப்பூட்டி முன்னேற்றம்காணச் செய்யவேண்டும். இல்லையேல் நம் முன்னையோர் நமக்காகச் செய்துவைத்த திருக்கோயில்கள், பிற சமய நிறுவனங்கள் பிற்காலத்து என்னும் என்பதைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்மின். ஆம் வழிக்குச் செயலாற்ற முனைந்து எழுமின்.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே."

1968-ஆம் ஆண்டுக்குரிய சமாசப் பணியாளர்கள்

(திருவெண்காடு மாநாட்டில் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள்.)

——:0:——

தலைவர் : திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை
(ஐ.ஏ.எஸ்.) ஓய்வு

துணைத் தலைவர்கள் :

1. திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை எம்.ஏ., எல்.டி.,
2. ,, கு. வரதராச பிள்ளை பி.ஏ.,

செயலாளர் : திரு. சி. வடிவேல்

துணைச் செயலாளர் : திரு. மு. நாராயணசாமி

பொருளாளர் : வித்துவான்,
திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை

சித்தாந்தம் ஆசிரியர் : திரு. மு. அருணாசலம் எம்.ஏ.,

,, துணை ஆசிரியர் : வித்துவான்,
திரு. இரா. சங்கரன்

மாதக் கணக்குத் தணிக்கையாளர் :
திரு. V. ஆறுமுக முதலியார்

ஆண்டுக் கணக்குத் தணிக்கையாளர் :
திரு. கி இல. பழனிசாமி பி.ஏ., எ.ல்டி.,

செயற்குழுவினர் :

1. திரு. K. அரங்கசாமி முதலியார் பி.ஏ.,
2. ,, பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ.
3. ,, கீ. இராமலிங்க முதலியார் எம்.ஏ.,
4. வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை,

5. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி.ஏ., எல்.டி.,
6. ,, R. சம்பந்தமூர்த்தி முதலியார்,
7. ,, கொ. ம. சிங்காரவேலு எம்.ஏ.,
8. ,, அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ.,
9. ,, தி. கி. நாராயணசாமி நாயுடு,
10, ,, P. முத்துக்குமாரசாமி நாயனர்,
11. ,, ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.,
12. ,, கல். முருகேச முதலியார் பி.ஏ.,

பணியாளர் குழு : திருவாளர்கள் & திருமதி

1. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், கோவை.
2. க. வச்சிரவேல் முதலியார், காஞ்சி.
3. வைரவப் பிள்ளை, கொழும்பு.
4. பு. ரா. சுவாமிநாதன் எம்.ஏ., எல்.டி., சிதம்பரம்.
5. எஸ். நடராச நாடார் பி ஏ., பி.எல்.,
6 வித்துவான். க. வெள்ளைவாரணனர், சிதம்பரம்.
7. கு. காமாட்சி அம்மாள் எம்.ஏ., சேலம்.
8. எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி.
9. மு. அண்ணாமலைச் செட்டியார், காரைக்குடி.
10. R. திருநாவுக்கரசு பிள்ளை, குடந்தை.

சித்தாந்தம் ஆசிரியர் ஆலோசனைக் குழு :

1. திரு. க. வச்சிரவேல் முதலியார், காஞ்சி.
2. ,, எஸ். அம்பிகைபாகன், யாழ்ப்பாணம்.
3. ,, க. வெள்ளைவாரணனர், சிதம்பரம்.
4. ,, ஆ. சுப்பிரமணியம், பொறியர்.
5. ,, ந. ரா. முருகவேள்.

ஆராய்ச்சிக் கழகம் :

1. மேலையூர் திரு. மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள்.
2. வித்துவான். திரு. ந. சிவப்பிரகாச தேசிகர், சிதம்பரம்.
3. வித்துவான் சொ. சிங்காரவேலனர்.
4. வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.

5. வித்துவான் அருணை வடிவேலு முதலியார்.
6. வித்துவான் ப. சுந்தரேசம் பிள்ளை, குடந்தை.

வெளியூர் ஆலோசனைச் சபையினர் : செங்கற்பட்டு

1. வித்துவான் திருஞானசம்பந்த முதலியார், காஞ்சி
2. கே. இராசு முதலியார், கைவண்டூர்
3. சி. பாலசுப்பிரமணியம், குன்றத்தூர்

தென்னார்க்காடு

1 என். எம். பொன்னம்பலம் பிள்ளை, சிதம்பரம்
2 எஸ். இரத்தினசாமி செட்டியார், சிதம்பரம்
3 சிவ. பழமலை, பெண்ணாகடம்

புதுவை

1. சேனாபதி முதலியார்
2. ஆர். எஸ். பழமலை
3. சென்னியப்ப முதலியார்

காரைக்கால்

1. சொ. தட்சிணாமூர்த்தி முதலியார்
2. கே. எஸ். எஸ். நடேச முதலியார்

தஞ்சாவூர்

1. விருத்தாசல செட்டியார்
2. வைத்திலிங்க முதலியார்
3. R. திருநாவுக்கரசு முதலியார்

திருச்சிராப்பள்ளி

1. ரா. அண. அண்ணாமலைச் செட்டியார், அரிமழம்
2. எல். எல்லப்பச் செட்டியார், காரைக்குடி
3. கி. ஆ. பெ. விசுவநாதன்

இராமநாதபுரம்

1 எஸ். நாராயணன் செட்டியார், காரைக்குடி
2 சிடி. எம். என். நாராயணன் செட்டியார், காரைக்குடி
3 காசிநாததுரை, இராமநாதபுரம்

மதுரை

1 இராதா தியாகராசன், மதுரை
2 புஷ்பம் நடராசநாடார், மதுரை
3 வித்துவான் ஔவை. சு. துரைசாமி பிள்ளை, மதுரை

திருநெல்வேலி

1 வி. எஸ். ஆறுமுகம் பிள்ளை, அம்பாசமுத்திரம்
2 வித்துவான மறை திருநாவுக்கரசு, ஆத்துக்குடி
3 எஸ். எஸ். அருணாசலம்பிள்ளை, திருநெல்வேலி
4 சிவ. ராம. அ. நடராச முதலியார், அம்பாசமுத்திரம்

வடஆர்க்காடு

1 புரிசை முருகேச முதலியார், திருவண்ணாமலை
2 வி. எஸ். கணபதி முதலியார், தெள்ளாறு

கன்னியாகுமரி

1 சி வள்ளிநாயகம் பிள்ளை பி. ஏ., பி. எல்.
2 வித்துவான் சி. குமரேச பிள்ளை

சேலம்

1 அ. கு. காமாட்சியம்மையார், சேலம்
2 அப்பாய் செட்டியார், சேலம்

தர்மபுரி

1 மணிவாசகம், பொத்தனூர், சேலம்
2 எம். ஆர். குணசீலன், தர்மபுரி

கோவை

1 சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், கோ
2 கே. பி ஆர். சுப்பராயன், சிவகிரி
3 கா. ஆறுமுகம், புன்செய்ப்புளியம்பட்டி

பெங்களூர்

1 ஏ. ஆர். அண்ணாமலை முதலியார்
2 எஸ். கனகசபாபதி பிள்ளை
3 பதுமநாப முதலியார்

கொழும்பு

1 குல சபாநாதன்
2 அருள் தியாகராசா
3 சபாபதிப் பிள்ளை

திரிகோணமலை

1 பண்டித ஆர். வடிவேலு
2 எஸ். அம்பலவாணன்

மட்டக்களப்பு

1 க. அருணாசல தேசிகர்
2 பூபால பிள்ளை
3 கணபதி

மலாய் நாடு

1 சிவநேயன்
2 ஆ. மு. பெரியசாமி பிள்ளை
3 ஆர். வி. கந்தையா
4 எம். இராமசாமி முதலியார்
5 முரு. பழ. இரத்தினம் செட்டியார்

கல்கத்தா

1 என். என். தியாகராசன், தமிழ் இலக்கியக் கழகம்
2 என். சிங்காரம், பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்,
31-B. ராஜாபசந்த் ராய் ரோடு, கல்கத்தா-29
3 K. T. பிள்ளை, கல்கத்தா

பம்பாய்

1 ஆர். முருகையா, 6-67 சரசுவதி காலனி, மாதுங்கா, பம்பாய்-19

தில்லி

1 எம். எஸ். பி. சண்முகம் எம்.ஏ., தில்லித் தமிழ்ச் சங்கம்
2 டாக்டர் பா. நடராசன்

"ஆங்கில சைவசித்தாந்தா" ஆலோசனைக் குழு

ஆசிரியர் : டாக்டர் V. A. தேவசேனாபதி எம். ஏ. பி. எச். டி.
துணையாசிரியர் ; P. முத்துக்குமாரசாமி நாயனார்.

ஆலோசனைக் குழு :

1 மு. அருணாசலம் எம். ஏ.
2 K. கோதண்டபாணிப் பிள்ளை பி. ஏ.
3 ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி.
4 பெ. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல். டி.
5 கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு)
6 நல் முருகேச முதலியார் பி. ஏ.
7 க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ. எல். டி

திருமுறை வழிபாடு

சென்னையில் உள்ள சிவன்கோவில்களில் ஒன்றில் பிரதி ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையில் திருமுறை ஓதி வழிபாடு நடத்துவதென்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் தருமபுர ஆதீன தேவார ஓதுவார் திரு. P. சுவாமி நாதன் அவர்களும், திருக்களர் தேவார ஓதுவார் திரு. சுந்தரேசன் அவர்களும் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள். ஓதுவார் ஒரு சொற்றொடரை ஓத அன்பர்கள் அதைப் பின் பற்றி ஓதும் முறையில் வழிபாடு நிகழ்கின்றது. இம்மாதம் 4–2–68 ஆம் தேதியில் அவ்வித வழிபாடு மயிலை, திரு கபா லீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. அடுத்த மாதத்தில் 3–3–68 தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை இலிங்கிசெட்டித் தெரு மல்லிகேஸ்வரர் ஆலயத்தில் காலை மணி 8 முதல் 10 வரை மேற்கண்டபடி திருமுறை வழிபாடு நடைபெறும். அன்பர்கள் அனைவரும் வருக.

பிரதி மாதம் நடக்கும் வழிபாடுகளைக் குறித்து "சித்தாந்தம்" இதழில் வெளியிடப்படும்.

திரிசிரபுரச் சைவசித்தாந்த சபையில் 4–2–68ல் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது. இலஞ்சி திரு அ. இ. முத்துக்குமாரசாமி (தமிழ் விரிவுரையாளர் T.T.C. திருச்சி) அவர்கள் "முத்தி கொடுப்பன" என்ற தலைப்பில் பேசினார்கள். திரு சிவப்பிரகாசம், சபைச் செயலாளர் நன்றி கூறினார்.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாச உறுப்பினர்கள் தங்கள் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தினையும் 31-12-67க்குள் அனுப்பியிருக்க வேண்டும். அவ்வாறு அனுப்பாதவர்கள் இப்போதாவது தாமதிக்காது அனுப்பிவைத்தல் நலம். வி. பி. பி.யில் சித்தாந்த இதழை அனுப்புவதாயின் 75 காசுகள் வீணாக அதிகம் செலுத்தவேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப் பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முகவரி, 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழ நாட்டில் பல பேரன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையினை அனுப்பிவைக்கவில்லை. ஆசிரியர் இசைவு பெற்று உடனே அவர்கள் அத்தொகையினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை "திரு. சுந்தரம், செயலாளர், மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம், 163, ஜலன்பந்தர், குலாலம்பூர்" என்ற முகவரிக்குச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாடவீதி, சென்னை-4,

வரப்பெற்றோம்

"சிவபெருமான் புகழ்மாலை" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இது சேலம் மாவட்டம் பொத்தனூர் திருமுறை மன்றத்தாரின் பதினொன்றாவது ஆண்டு விழா சிதம்பரத்தில் நிகழ்ந்தபோது வெளியிடப்பெற்றது. இதில் வணக்கப் பாடல்கள், அவையடக்கம், திருமுறைப்பெருமை பற்றிக் கூறும் ஆறு வெண்பாக்களும் சிவபெருமான் புகழ்பற்றிப் பேசும் முப்பது வெண்பாக்களும் ஆக முப்பத்தாறு பாக்க ளுள்ளன. பாக்கள் எளிமை, உருக்கம் வாய்ந்தவை. தூய தமிழ் நடையில் அமைந்திருப்பது போற்றத்தக்கது. நான்கு பெருமக்களின் சிறப்புப்பாயிரங்களுமுள்ளன. பத்தித்துறை யில் ஆசிரியர் வித்துவான் செ. கு. வரதராசன் எம் ஏ., அவர் களின் முயற்சி பாராட்டத்தக்கது. விலை குறிக்கப்பெற வில்லை. அஞ்சற் செலவு ஆக 15 காசுகள் அஞ்சல் பில்லை கள் அனுப்பி நூலைப் பெற்றுக்கொள்ளலாம். நூல கிடைக்கு மிடம்:—தலைவர், திருமுறைக் கழகம், பொத்தனூர், சேலம் மாவட்டம். (அம்பை)

மதிப்புரை

"குமரகுருபரன்" பத்தொன்பதாவது ஆண்டு மலர் வரப்பெற்றோம். திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் அருள்திரு அருள் நந்தியடிகளாரவர்களின் திருக்கண்ணோக் கூற்றுச் சமயத் தொண்டாற்றும் சிறந்த திங்களிதழ் இஃதென் பது யாவரும் அறிந்ததொன்றாம். இதில் சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, தணிகைமணி திரு வ. சு. செங்கல் வராய பிள்ளை முதலிய பல பெருமக்கள் எழுதிய சிறந்த கட் டுரைகள் அழகு தருகின்றன. மூன்று ஆங்கிலக் கட்டுரை களும் பதினெட்டுத் தமிழ்க்கட்டுரைகளும் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. சமய அறிவும் தமிழறிவும் பெற்றுச் சிறந் தோங்கிய நிலையில் இம்மலர் மிகவும் மணமுடைத்து. வருடச் சந்தா ரூ. 3-00. ஆண்டு மலர் 37 காசுகள். வேண்டு வோர் "T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.. நிர்வாக ஆசிரியர், "குமரகுருபரன்" ஸ்ரீ வைகுண்டம், நெல்லைமாவட் டம்" என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(அம்பை)

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905 — பதிவு - 1915)

62 - ஆவது ஆண்டு அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு. ஞானியாரடிகள் திருமடத்தில், அவர்கள் முன்னிலையில் மறைமலை அடிகளாரால், விசுவாவசு ஆண்டு, ஆனித் திங்கள் 24-ஆம் நாள் (7-7-1905) வெள்ளிக் கிழமை தொடங்கப்பெற்றது. இறைவன் திருவருளால் இன்று வரை மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்கவேண்டுமென்ற பெருநோக்கத்துடன் தொண்டாற்றி வருகின்றது. இச்சமாஜம் சபைகளுக்குரிய பதிவுச் சட்டப்படி எஸ். 6/1915—16 என்ற எண்ணில் 11-11-1915 ஆம் தேதியில் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

2. இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள்

தலைவர்	:	திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு) 26-2-1967 வரை
		திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. 26-2-1967 முதல்
துணைத்தலைவர்கள்	:	திரு. ராவ்பகதூர் - க. அரங்கசாமி முதலியார், பி. ஏ.
		திரு. ராவ்சாகிப் - நல். முருகேச முதலியார், பி.ஏ. 26-2-1967 வரை.
		திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு) 30-4-1967 முதல்

பொதுச்செயலாளர் : திரு. தி.கி. நாராயணசாமி நாயுடு 26-3-1967 வரை.
திரு. சி. வடிவேல், 30-4-1967 முதல்.

துணைச்செயலாளர் : திரு. மு. நாராயணசாமி முதலியார்.

பொருட்காப்பாளர் : திரு. எஸ். இராமசாமி 28-7-67 வரை
திரு. எம். சந்திரசேகர முதலியார், 28-8-67 முதல்.

சித்தாந்தம் ஆசிரியர் : திரு. மு. அருணாசலம், எம். ஏ.
துணை ஆசிரியர் : வித்துவான் திரு. அம்பை - இரா. சங்கரனார்.

மாதக் கணக்குத் தணிக்கையாளர் : திரு. சி. வா. கிருஷ்ண மூர்த்தி.

ஆண்டுக் கணக்குத் தணிக்கையாளர் : திரு. எஸ். டி. குமார், பி.ஏ.
திரு. வி. ஆறுமுக முதலியார்.

செயற்குழுவினர் :

1. திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.
2. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. (26-2-67 வரை)
   திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ. (28-8-67 முதல்)
3. திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.
4. திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ.
5. திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி.
6. திரு. க. வடிவேலாயுதம், எம். ஏ.
7. திரு. நே. த. கிருஷ்ணசாமி, எம். ஏ., பி. டி.
8. திரு. கொ. கீ. சிங்காரவேலு, எம். ஏ.
9. வித்துவான் - திரு. பி. சொ. சண்முகம் பிள்ளை.
10. வித்துவான் - திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை.
11. திரு. கி. லெ. பழநிசாமி, பி. ஏ., எல். டி.
12. திரு. எம். சந்திரசேகர முதலியார். (27-8-67 வரை)
    திரு. எம். சிவராமன், பி. ஏ. (28-8-67 முதல்)

3. அறுபத்தோராவது ஆண்டு நிறைவு விழா

நம் சமாஜத்தின் 61-ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சைவர், சைவ இளைஞர் மாநாடுகளும் 30-12-66, 31-12-66, 1-1-67 ஆகிய மூன்று நாட்களிலும் திருச்சிராப்பள்ளியில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. முதல் இரண்டு நாட்களும் காஞ்சிபுரம் தொண்டை மண்டலம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதினம் குரு மகாசந்நிதானம் தவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமை வகித்தார்கள். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கொடியேற்றினார்கள். மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் திரு. கு. வரதராஜ பிள்ளையவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். தருமையாதீனம் தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மகாநாட்டுத் திறப்புரையாற்றித் தருமை மகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரையையும் வழங்கினார்கள். தவத்திரு. மீனாட்சிசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளும் ஆசியுரை வழங்கியருளினார்கள்.

திருச்சி திவான்பகதூர் தி. மு. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் தவத்திரு. மீனாட்சிசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் இயற்றிய இறைஞானபோதம், திரு. கு. வரதராஜ பிள்ளை எழுதிய உரையுடன் கூடிய நூலையும், திரு. க. வச்சிரவேல் முதலியார் எழுதிய திருவுந்தியார் உரை என்னும் நூலையும், சைவானுட்டான விளக்கம் என்னும் நூலையும் வெளியிட்டார்கள்.

மூன்றாம் நாள் நடைபெற்ற சைவ இளைஞர் மாநாடு திரு. காசிநாததுரை யவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. விழா சிறப்புற நடைபெற உதவிய அனைவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

4. சைவ சமய குரவர் விழாக்கள்

அப்பர் திருநாள் 3-5-67 அன்று (மயிலை, கபாலீசுவரர் கோயிலில்) திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமை

யில் நடைபெற்றது. நாகர்கோயில், வித்துவான் - திரு. ஸி. குமரேசப் பிள்ளை அவர்கள், "அப்பரும் அப்பூதியாரும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

25-5-67 ஆம் தேதி நடைபெற்ற திருஞானசம்பந்தர் விழாவில் வித்துவான் - திரு. அம்பை சங்கரனார், "சம்பந்தர் காட்டும் நெறி" என்னும்பொருள் பற்றி விரிவுரையாற்றினார்.

12-8-67-ஆம் நாள் இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையில் புலவர் - திரு. இரா. செல்வக் கணபதியவர்கள், "சுந்தரர் செந்தமிழ்" என்னும் பொருள் பற்றி மிக விரிவாகப் பேசினார்கள்.

5. சேக்கிழார் விழா

11-6-67-ஆம் நாள் மயிலை கபாலீசுவரர் கோயிலில் வித்துவான் - திரு. பி. சொ. சண்முகம் பிள்ளையவர்கள், "சேக்கிழார்" பற்றி விரிவாகப் பேசினார்கள்.

6. மெய்கண்டார் விழா

12-11-67-ஆம் நாள் மயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில், "திருக்கோயில்" ஆசிரியர் - புலவர் - திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள், "மெய்கண்டாரும் சிவஞான போதமும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

7. சிறப்புக்கூட்டங்கள்

அருள்திரு. சிதம்பர சுவாமிகளின் 308-வது குருபூஜை நாளாகிய 23-5-67 அன்று நம் சமாஜத்தின் சிறப்புக் கூட்டம் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் மடாலயத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அவ்வமயம் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் "சிதம்பரசுவாமிகள்" என்பது பற்றியும், வித்துவான் திரு. பா. சொ.

இலிங்கம் அவர்கள், "திருநாவுக்கரசரும் சிதம்பரசுவாமி களும்" என்பது பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

சமாஜத்தின் சார்பில் 24-9-67 ஞாயிறு காலை 10 மணிக்கு மயிலை கபாலீசுவரர் கோயிலில் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மலேசியாவிலிருந்து வந்துள்ள சித்தாந்த வித்தகர் - திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள், "சைவ சித் தாந்தத்தில் வினை" என்னும் பொருள் பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள்.

மயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் 29-10-67 மாலை நடை பெற்ற சிறப்புக் கூட்டத்தில் வாரணாசிப் பல்கலைக் கழகம் டாக்டர். கே. சிவராமன் அவர்கள், "சைவ சித்தாந்தமும் உலகச் சமயங்களும்" என்பது பற்றி விரிவுரையாற்றினார்கள். திரு. பெ. திருஞானசம்பந்தம் அவர்கள் தலைமைவகித்தார்கள்.

8. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் அறக்கட்டளை

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் அறக்கட்டளை யின்படி திருநீலகண்ட நாயனார் விழா 2-2-67 மாலை நடை பெற்றது. திருவையாறு ஸ்ரீ அண்ணாசாமி சிரௌதிகள், "திருநீலகண்ட நாயனார்" பற்றி விரிவுரை ஆற்றினார்கள். 23-4-67 மாலை திரு. ந. ரா. முருகவேள் அவர்கள், "உமாபதி சிவம்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். இவ்விரு கூட்டங்களும் திருமயிலை கபாலீச்சுரத்தில் நடைபெற்றன. 11-5-67 அன்று திருமயிலை வெள்ளீச்சுரர் ஆலயத்தில் நடை பெற்ற கூட்டத்தில் திருமதி. வள்ளியம்மையார் "மங்கையர்க் கரசியார்" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள். 4-6-67 ஞாயிறன்று இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் திரு. சரவணபவானந்தர் அவர்கள், "பாம்பன் அடிகள்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் நம் சமாஜத்தின் வாயிலாய் ஏற்படுத்தியுள்ள இரண்டாம் அறக்கட்டளையைப் பற்றிக் கூறவேண்டுவது முக்கிய கடமை. சைவப்பெரியா ரவர்கள் தம் தந்தையார் திரு. சொ. சபாபதிப்பிள்ளை, தாயார் திருமதி. மீனாட்சியம்மையார் அவர்கள் நினைவாக ஆயிரம் ரூபாய்களை சமாஜத்திடம் தந்து அம்முதலிலிருந்து வரும் வட்டியைக்கொண்டு ஆண்டு தோறும் கீழ்க்காணும் நான்கு சொற்பொழிவுகள் ஆற்ற ஆவன செய்யும் பொறுப்பைச் சமாஜத்திடம் ஒப்புவித்துள்ளார்கள். (1) வைராக்கிய சதகம் அல்லது கொலைமறுத்தல். (2) பிரபுலிங்கலீலை அல்லது திருப் போரூர்ச் சந்நிதிமுறை. (3) தவத்திரு. ஞானியாரடிகள் சரித் திரமும் போதனையும். (4) திரு. வி. க. வும் பெண்மையும் அல்லது பாரதப் பெண்மணிகள் கற்பு, வீரம்.

இதேபோல் மற்ற தரும சீலர்களும் செய்வார்களானல் நம் சமயத் தொண்டு சிறந்தோங்கும் என்று கூறவும் வேண்டுமோ?

9. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா

சைவப்பெரியார், வாரவழிபாட்டுத் தந்தை திரு. ச. சச்சி தானந்தம் பிள்ளையவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டு சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். 15-8-67 இல் இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் திவான் பகதூர் திரு. K. S. இராமசாமி சாஸ்திரியாரவர்கள் தலைமையிலும், 27-8-67 அன்று மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி யார் கூடத்தில் திரு. K. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் தலைமையிலும் பாராட்டு விழாக்கள் மிகச் சிறப்பாக நடந்தன. 29-10-67 மாலை சமாஜச் சார்பில் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் சிறப்பு வழிபாடும், திரு. P. திருஞானசம்பந்தம் அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றன.

சைவப் பெரியாரவர்கள் இன்னும் தொடர்ந்து பல்லாண்டுகள் சமயத் தொண்டு செய்துவர அவர்களுக்கு உடல் நலமும் நீண்ட ஆயுளும் இறைவன் அருளுவானாக.

10. மணி விழா

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினரும் தாம்பரம் கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியருமாகிய திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரவர்களுடைய 60-ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சமாஜச் சார்பில் 12-11-67 மாலை திருமயிலை கபாலீச்சுரத்தில் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் திருக்கோயில் வழிபாடும் பாராட்டு விழாவும் நடைபெற்றன. அவர்கள் தொடர்ந்து தமிழுக்கும் சமயத்துக்கும் பணியாற்ற உடல் நலனுடன் பல்லாண்டு வாழ்வார்களாக.

11. காலைக் கூட்டு வழிபாடு

மலேயா திரு. கா. இராமநாதஞ் செட்டியார் தொடக்கி வைத்த காலைக் கூட்டு வழிபாடு நாள்தோறும் திருமயிலைக் கபாலீச்சுரர் கோயிலில் நடைபெற்று வருகிறது.

12. பெரிய புராண விரிவுரை

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை சென்னை, இலிங்கிச் செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ மல்லிகேசுவரர் கோயிலைச்சார்ந்த சபைக் கட்டடத்தில் சித்தாந்தவித்தகர் கயப்பாக்கம் திரு.சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் சமாஜ ஆதரவில் பெரிய புராண விரிவுரை நிகழ்த்தி வருகிறார்கள். இதற்குரிய செலவு கட்டட டிரஸ்டு நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது.

13. சங்க இலக்கிய வெளியீடு

சமாஜம் வெளியிட்ட "சங்க இலக்கியம்" என்னும் நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிட பாரி நிலையத்தாருக்கு அனுமதியளித்ததற்காகப் பாரி நிலையத்தார் ரூ. 1000 (ரூபாய்

ஆயிரம்) கொடுத்துள்ளார்கள். அவர்களுக்குச் சமாஜம் நன்றி செலுத்துகிறது.

14. சமாஜத் தேர்வு

1967-ஆம் ஆண்டு 18 பேர்கள் சைவப் புலவர் தேர்விலும் 22 பேர்கள் இளஞ் சைவப்புலவர் தேர்விலும் கலந்துகொண்டனர். திருச்சிற்றம்பலம், யாழ்ப்பாணம், நாவலப்பட்டி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தேர்வுகள் நடந்தன. விவரம் பின்னர் சித்தாந்தத்தில் வெளியிடப்பெறும்.

15. ஆங்கிலப்பத்திரிகை "சைவ சித்தாந்தா"

சமாஜத்தின் அறுபதாண்டு நிறைவு விழாவின்போது தொடங்கப்பட்ட ஆங்கில முத்திங்களிதழ் "சைவ சித்தாந்தா" இவ்வாண்டும் வெளியிடப் பெற்று வருகிறது. ஆனால் எதிர்பாராத சில சந்தர்ப்பங்கள் நேரிட்டதால் மூன்று மாதங்களுக்கொருமுறை வெளியிடுவதற்குப் பதிலாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறைதான் வெளியிட முடிந்தது. இனிமேலாவது மூன்று மாதங்களுக் கொருமுறை தவறாது வெளியிடமுடியும் என்று நம்பப்படுகிறது. தொடக்கத்திலிருந்து இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்திவந்த திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொணடார்கள். எனினும் பத்திரிகை தொடர்ந்து திறம்பட நடந்துவர உதவி செய்ய ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்களுக்கும் இப்போது ஆசிரியப் பொறுப்பை ஏற்றுள்ள சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் - V. A. தேவசேனபதி, எம்.ஏ., பி. எச்டி. அவர்களுக்கும் சமாஜத்தின் நன்றி உரித்தாகுக. சமாஜத் துணைத்தலைவர் திரு.கோ.மு. முத்துசாமி பிள்ளையவர்களும் ஆங்கில இதழ் சிறந்த முறையில் வெளிவர பலவகைகளிலும் உதவி வருகிறார்கள். அவர்களுக்கும், பிறமொழியினரும், பிறநாட்டினரும் சைவ சமயத்தின் உண்மைகளை அறியும் வகையில் சிறந்த கட்டுரைகள்

தந்து உதவும் பெரியோர்களுக்கும் சமாஜத்தின் நன்றி உரியது. ஆனால் ஒரே ஒரு குறை, பெருங்குறை. தற்போது இப் பத்திரிகையின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. சமாஜ உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு சந்தாதாரராவது சேர்க்க முன்வருவார்களானால் பத்திரிகை தொடர்ந்து நற்பணியாற்ற முடியும். கல்கத்தா அன்பர் - திரு. K. தியாகராச பிள்ளையவர்கள் இவ்வாண்டு ஆங்கிலப் பத்திரிகையின் இதழ்களை 20 வெளிநாட்டு அறிஞர்களுக்கு அனுப்புவதற்காக ரூ. 250/- நன்கொடையளித்துள்ளார்கள். இன்னும் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இதேபோன்று ஆண்டுதோறும் ரூ. 250/- நன்கொடையளிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். அவர்களுக்கு சமாஜம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

16. பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்கள்

இவ்வாண்டு பொதுக் கூட்டம் இரண்டும் செயற்குழுக் கூட்டம் பன்னிரண்டும் நடைபெற்றன.

17. பொருள் நிலை

1-12-66 முதல் 30-11-67 முடிய 12 மாதங்களின் வரவு செலவுக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடுகள் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்டி வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடும் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

18. வேண்டுகோள்

சமாஜப் பணி இன்னும் சிறக்க சமாஜத்திற்குச் சொந்தமான கட்டடம் உடனடித் தேவை. கட்டட நிதிக்கென மணலி திரு. இராமகிருஷ்ண முதலியார் ரூ. 4000 தந்துள்ளார்கள். அவர்கள் கொடுக்க இசைந்த மீதி ரூ. 2000-ஐயும் விரைவில் கொடுத்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படு

கிறது. மலேயா வாழ் பேரன்பர் திரு. சிவகேசன் அவர்கள் கட்டட நிதிக்கென ரூ. 1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக உதவியுள்ளார்கள். அவர்களுக்கு சமாஜம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இப்பேரன்பரைப் போன்று தக்கார் பலரும் நன்கொடை நல்கி சமாஜக் கட்டடம் விரைவில் எழ உதவி செய்து அருள்வார்களாக.

தற்போது சமாஜ உறுப்பினர் எண்ணிக்கை 747. (ஆயுள் உறுப்பினர் 159; பிறர் 588) ஆக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் சித்தாந்த இதழ் இலவசமாக அனுப்பப் படுகிறது. 62 ஆண்டுகளாக அரும்பணி ஆற்றிவரும் சமாஜத்திற்கு உறுப்பினர் எண்ணிக்கை மிகக் குறைவு என்று கூறத் தேவையில்லை. ஆகவே, இவ்வெண்ணிக்கையைப் பெருக்க ஒவ்வொரு உறுப்பினரும் முயலவேண்டும்.

19. நன்றி

சைவ சித்தாந்த மகா சமாஜத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்த உயர்திரு. மறைமலை அடிகளார், தவத்திரு. ஞானியார் சுவாமிகள், திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை ஆகியோருக்கும், சமாஜத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட திரு. வி. கலியாணசுந்தரனுர், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் போன்ருேருக்கும் சமாஜம் வணக்கமும், நன்றியும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. மற்றும் பல்லாற்ருனும் சமாஜப் பணியில் ஈடுபட்டுவரும் அன்பர்கள் அனைவருக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. சமாஜப் பணி சிறக்கவும், சைவம் தழைக்கவும் இறைவன் அருள்புரிவாளுக.

செயற்குழுவினர் அனுமதிப்படி

இங்ஙனம்

சென்னை
24—12—'67.

சி. வடிவேல்
மு. நாராயணசாமி
செயலாளர்கள்.

'சைவ சிந்தாந்தா' ஆங்கில முத்திங்கள் இதழின் வரவு செலவுத் தொகுப்பு

1—12—66 முதல் 30—11—67 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	5	77	ஆங்கில இதழ் அச்சுக்கூலி	1015	25
முன் வங்கியிருப்பு	288	67	காகிதம் முதலியன	842	68
1966 சந்தா	127	50	பணியாள் சம்பளம்	89	50
1967 ,,	1046	99	கட்டுரைகள் டைப் அடித்தது	14	00
விளம்பரம்	892	50	வண்டிச் செலவு	14	39
நன்கொடை	85	00	தபாற்செலவு	241	10
வட்டி	4	13	பலவகைச் செலவு	3	97
சித்தாந்தம் பொதுக் கணக்கிலிருந்து தற்காலிகக் கைப்பற்று	753	63	ரொக்க இருப்பு	13	71
			வங்கியிருப்பு	969	59
	3204	19		3204	19

வா. ஆறுமுகம், ஆண்டுக் கணித பரிசோதகர்.

சி. வா. கிருஷ்ணமூர்த்தி, மாதக் கணித பரிசோதகர்.

எம். சந்திரசேகரன், பொருளாளர்.

சி. வடிவேல்,
மு. நாராயணசாமி,
செயலர்கள்

சைவ சித்தாந்த மகா சமாஜ 62-ஆம் ஆண்டு வாவு செலவுத் தொகுப்பேடு
(1—12—66 முதல் 30—11—67 வரை)

வாவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	11	53	அச்சுவகை	1455	00
முன் வங்கியிருப்பு (S. B. Account)	1676	68	காகிதம் முதலியன	620	99
தவணை வைப்பு நிதி	11350	00	தவணை வைப்புநிதி	12100	00
சந்தா முதலியன	2643	74	தபால் வகை	477	88
ஆயுள் சந்தா	950	00	போக்கு வரவு	194	89
திருமண நன்கொடை.	35	00	அலுவலக மின்சாரக் கட்டணம்	24	00
ஆண்டு விழா வரவு	249	00	எழுத்துவகைச் சாமான்களும் பிறவும்	21	18
வங்கி வட்டி	926	01	சிறப்பு நாட்கள்	83	50
தேர்வுக்கட்டணம்	23	00	ஆங்கிலப் பத்திரிகைக்கு மாற்றம்	753	63
கட்டிட நன்கொடை	1000	00	கையிருப்பு	11	51
சமயக்கட்டளை	1000	00	வங்கியிருப்பு [S. B. Account]	5245	30
சங்க இலக்கிய வெளியீட்டு உரிமை வரவு	1000	00			
புத்தக விற்பனை வரவு	122	92			
	20987	88		20987	88

சமாஜத்தின் தற்காலப் பொருள் நிலை

	ரூ.	பைசா
வைப்பு நிதி விவரம் :		
மலேயா சைவ சித்தாந்த சபையார் தந்தது	1000	00
சைவத் தேர்வுப் பரிசுக்கு ஓர் அன்பர் தந்தது	1000	00
சமயக் கட்டளைகட்குத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தந்தது (I & II)	2000	00
1963ஆம் ஆண்டிலிருந்துசேர்ந்த ஆயுள் உறுப்பினர்தொகை	3850	00
சங்க இலக்கிய வெளியீட்டு உரிமை வரவு	1000	00
மலேயா திரு. சிவநேசன் செட்டியார் அவர்கள் கட்டட நன்கொடை	1000	00
மலேயா திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் கட்டளை	750	00
சமாஜ இருப்புத் தொகை	1500	00
மற்றைய நிதி விவரம் :		
ஆங்கில முத்திங்கள் வெளியீட்டுக்குக் கடனைகத் தந்தது	1789	82
கையிருப்பு	11	51
வங்கியிருப்பு (திரு. இராமகிருஷ்ண முதலியார் தந்த தொகையுள்பட)	5245	30
கையிருப்புப் புத்தகங்களின் (விற்பனை) மதிப்பு	3600	67
	22747	30

வா. ஆறுமுகம், சி. வா. கிருஷ்ணமூர்த்தி, எம். சந்திரசேகரன், சி. வடிவேல்,
ஆண்டுக் கணித பரிசோதகர். மாதக் கணித பரிசோதகர். பொருளாளர். மு. நாராயணசாமி,
செயலர்கள்

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்ட்
(எண் 2, 3, 4, ஈவினிங் பஜார் கடைகள்) வரவு செலவுத் தொகுப்பு
1—12—66 முதல் 30—11—67 வரை

வரவு	ரூ.	பைசா	செலவு	ரூ.	பைசா
முன் கையிருப்பு	498	67	தேவாரம் அச்சுச் செலவு	531	78
முன் வங்கியிருப்பு	372	84	தேவார ஆசிரியர் சம்பளம்	960	00
வாடகை வரவு	2376	00	பெரியபுராண விரிவுரை	264	50
வட்டி வரவு	7	56	முனிசிபல் வரி	503	50
			தபாற் செலவு	1	70
			ரப்பர் ஸ்டாம்பு	2	25
			சமாஜ அலுவலக வாடகை	225	00
			பின் ரொக்க இருப்பு	148	05
			பின் வங்கி இருப்பு	618	29
	3255	07		3255	07

சென்னை
12—12—67

வா. ஆறுமுகம்,
கணித பரிசோதகர்

நே. த. கிருஷ்ணசாமி,
கட்டட டிரஸ்டி.

அ. சோமசுந்தரஞ் செட்டியார்,
கட்டட டிரஸ்டுத் தலைவர்

ச மா ஜ வெ ளி யீ டு க ள்

		ரூ.பைசா
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் முந்நூல் 0 40 அறுபத்து மூவர்	0	06
வைர விழா மலர் 2 00 அறப்பயிற்சிமாலை	0	50
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு 0 75 பிரதோஷ வழிபாடு	0	20
நான் நம்புவன சில 0 10 விநாயகர் வழிபாடு	0	20
கூட்டுவழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி— பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—தெளிவுரையுடன்	0	50
திருவெம்பாவை—விசேட உரையுடன்	0	75

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

தற்போது கிடைக்கக்கூடியவை :

சைவ சமய சரபம்	*2*	*50*
நாலாயிரப் பிரபந்த விசாரம்	*1*	*00*
சேந்தன் செந்தமிழ் மூலமும் உரையும்	*1*	*50*
செவியறிவுறூஉ	*0*	*20*
பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	*1*	*50*
சிறுநூற்றிரட்டு	*1*	*25*
சிவஞான தீபம்	*0*	*50*

	ரூ.	பைசா
ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	0	30
சைவ மகிமையும் சுருக்க அனுட்டான விதியும்	0	50
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும், குரு சீட சம்பவ வரலாற்று வியாசமும்	2	50

தபால்—ரயில் செலவு தனி.

" சித்தாந்தம் "—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 50.

" சைவ சித்தாந்தம் "—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

'SAIVA SIDDHANTA'

A HIGH CLASS ENGLISH QUARTERLY JOURNAL

DEVOTED TO

Philosophy, Religion & Culture

Run by

Saiva Siddhantha Maha Samajam,
12, East Mada Street, MYLAPORE, MADRAS-4.

Annual Subscription Rs. 5/- only.

PLEASE SUBSCRIBE AND ENCOURAGE.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14